Registered as a news paper.
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும், இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும், பொருத்திக்கொள்ளவும் உறுதி மிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எரிக்கணேஷ்

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2486

இல. 91, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி கொக்குவில்

இல. 80, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 12 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 13 (28.10.2004) வியாழக்கிழமை இதழ்: 28

# ஜே.வி.பியின் இணக்கப்பாடின்றியே அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர்

## அரசாங்கம் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகளுக்கான நியமனங்கள் தமது கட்சியின் இணக்கப்பாடின்றியே மேற்கொள்ளப்பட்டுவருவதாக ஜே.வி.பி கண்டனம் தெரிவித்துள்ளது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் அரசாங்கம் ஒருபோதும் பேச்சுக்களை நடத்தக் கூடாது எனவும் ஜே.வி.பி. அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரு புளொட் உறுப்பினர்களை வவுனியாவில் காணவில்லை!

(வவுனியா)

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு புளொட் அமைப்பின் உறுப்பினர்களைக் காணவில்லையென அந்த அமைப்பு வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் முறையிட்டுள்ளது.

செல்வம் (சேமமடு), மனோ ஆகிய இருவருமே காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு குறிப்பிட்ட சேமமடுவில் அமைந்துள்ள செல்வம் என்பவரது வீட்டிலிருந்து இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்றதாகவும், அதன் பின்னர் இருவர் தொடர்பாகவும் எவ்வித தகவலும் இல்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவர்கள் சென்றதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் நேற்றைய தினம் வைரவப் புளியங்குளம் பகுதியிலிருந்து புளொட் அமைப்பினர் கொடுத்த தகவலையடுத்து வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டது. (03)

## வீதியோரத்தில் நின்றுகொண்டிருந்த வலயக் கல்விப் பணிப்பாளரை மினிபஸ் மோதிக் கொன்றது!

### புலோலியில் நேற்றுச் சம்பவம்



(வடமராட்சி)

மந்திகை மடத்தடிச் சந்தியில் - பருத்தித்துறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை

## புலிகள் - படையினர் சந்திப்பு சனியன்று மட்டக்களப்பில்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் படை அதிகாரிகளுக்குமிடையிலான அடுத்த சந்திப்பு எதிர்வரும் சனிக்கிழமை வவுணதீவு யுத்தசூனியப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.


இந்தமாதம் 6 ஆம் திகதி இரு தரப்பினருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி மாதமொரு முறை நடைபெறவிருக்கும் முதலாவது சந்திப்பு இதுவாகும்.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதிகள் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்

...olaham Foundation
...aavanaham.org

# வலயக் கல்விப் பணிப்பாளரை மினிபஸ் மோதிக் கொன்றது!

## புலோலியில் நேற்றுச் சம்பவம்






(வடமராட்சி)

மந்திகை மடத்தடிச் சந்தியில் - பருத்தித்துறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்றுகொண்டிருந்த தீவக வலயக் கல்விப் பணிப்பாளரை மோதிக்கொன்றதுடன் வீட்டு வளவினுள்ளும் உட்புகுந்தது.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் 12.00 மணியளவில் இடம்பெற்றது. அல்வாய் கிழக்கு மடத்தடியைச் சேர்ந்தவரும் ஹாட்லிக் கல்லூரி முன்னாள் அதிபரும், தீவக வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய பொன்னுத்துரை வேணுகோபால் (வயது 54) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

அத்துடன் புலோலி வடமேற்கை சேர்ந்த கதிர்காமத் தம்பி நாகநாதன் (வயது 34) துன்னாலை வடக்கைச் சேர்ந்த கந்தையா மகேஸ்வரன் (வயது 56) மற்றும் வல்லிபுரம் சுவேந்திரன் என்ற சிறுவனும் இந்த விபத்தில் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மேற்படி வலயக் கல்விப் பணிப்பாளர் மந்திகை சந்தைக்குச் சென்றுவிட்டு அவரின் தங்கையின் வீட்டுக்கு முன்புறம் நின்றுகொண்டிருந்தபோது, இந்தக் கோர விபத்து இடம்பெற்றது.

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க. அரியநாயகம் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் மரணமடைந்தவரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், காயமடைந்த கந்தையா மகேஸ்வரன் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். விபத்துக்குள்ளான மினிபஸ்ஸை ஓட்டிவந்த சாரதி தலைமறைவானதுடன் மினிபஸ் சாரதியின் அடையாள அட்டையை பொலிஸார் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சனியன்று மட்டக்களப்பில்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் படை அதிகாரிகளுக்குமிடையிலான அடுத்த சந்திப்பு எதிர்வரும் சனிக்கிழமை வவுணதீவு யுத்தசூனியப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

இந்தமாதம் 6 ஆம் திகதி இரு தரப்பினருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி மாதமொரு முறை நடைபெறவிருக்கும் முதலாவது சந்திப்பு இதுவாகும்.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதிகள் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசலயன் தலைமையிலும்,

படை அதிகாரிகள் 23 - 2 ஆவது படைப் பிரிவு தலைமையக கட்டளை அதிகாரி கேணல் லக்சிறி அமரதுங்க தலைமையிலும் கலந்து கொள்வார்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் வருகை தாமதம்

(கொழும்பு)

ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று நாடு திரும்பத் திட்டமிட்டிருந்த விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் அடங்கிய குழுவினர் தமது வருகையை பிற்போட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தற்போது சுவிற்சர்லாந்தில் தங்கியுள்ள இவர்களின் முக்கிய சந்திப்புக்கள் தொடர்வதால், எதிர்வரும் வெள்ளிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பாக கிளிநொச்சி திரும்புவார்கள் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால பதவி விலக முடிவு!

(கொழும்பு)

அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால தனது பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த சில நாட்களுக்கு முன்பாக தேசிய சமாதான ஆலோசனைச் சபைக்கு எஸ்.எம்.ஜெயசேனா புதிய செயலாளராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்தார்.

எஸ்.எம்.ஜெயசேனா ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் மிகவும் நெருக்கமானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் ஏற்கனவே வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் முரண்பாட்டைக் கொண்டுள்ள ஜயந்த தனபால தனது பொறுப்புக்களை ஏற்கும் போது தாம் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழே பணிபுரியவுள்ளதாகவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மனநோயாளியான மகளே தாயை வெட்டிக் கொன்றார்

## ஆனைக்கோட்டையில் பரபரப்புச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மையாகவுள்ள வீடு ஒன்றில் தனது தாயாரையே மனநிலை பாதிக்கப்பட்ட அவரது மகள் வெட்டுக்கத்தி ஒன்றினால் தலையிற் பலமாக வெட்டிக் கொலைசெய்து புதைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தவேளை அகப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது. பளையை நிரந்தர முகவரியாகக் கொண்ட 79 வயதான பாவிலுப்பிள்ளை லோறன்சியா என்ற மூதாட்டியே தனது மகளால் கொலைசெய்யப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

இயலாத நிலையில் இருந்த மூதாட்டியை வெட்டுக் கத்தியினால் தலையிற் பலமாக வெட்டிய பின்னர் சுமார் இரண்டு அடி ஆழமான குழியில் புதைக்கும் முயற்சியில் ஈடுபட்டபோதே - வீட்டுக்கு வந்தவர்களின் மூலம் மேற்படி சம்பவம் அம்பலமாகியது.

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

## கரவெட்டி பிரதேச செயலகத்தின்

# கலாசார பேரவை நடாத்தும் இரு நாள் கலாசார நிகழ்வுகள்

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை நடாத்தும் பிரதேச கலாசார விழா கரவெட்டி பிரதேசசபை மண்டபத்தில் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் வெகுவிமரிசையாகக் கொண்டாடப் படவுள்ளது. முதல் நாள் நிகழ்வு மாலை 2.00 மணிக்கு ஆரம்பமாகி இரவு 7.00 மணிக்கு நிறைவுறும்.

முதல்நாள் நடைபெறும் கலைஞான கேசரி, மன்னவன் கந்தப்பு அரங்கு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை உபதலைவர் க.நடேசு (தெணியான்) தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்கிறார். நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், யாழ் அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், வடமராட்சி அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் அன்பு ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

இரண்டாம் நாள் பேராசிரியர் அ.துரைராசா அரங்கிற்குப் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். மேற்படி அரங்கில் நிகழும் ஆய்வரங்கில் ஆயவாளர்களாக யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் க.அருந்தாகரன், ஈ.குமரன் ஆகியோரும், க.குணேஸ்வரனும் கலந்து கொள்கின்றனர்.

மாலை பண்டிதர் இ.வீரகத்தி அரங்கிற்குப் பிரதேச செயலர் சத்தியசீலன் தலைமை தாங்குகிறார். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், செ.கஜேந்திரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக பிரதேசசபை செயலர் ஏ.எம்.ஜோசெப், வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு அம்சமாக இயல், இசை, நாடக நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்ச்சிகளில் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரபல கல்லூரிகளும் நாடக மன்றங்களும் கலந்துகொள்ளவுள்ளன. அத்துடன் கலைஞர்களின் ஆக்க வெளியீடுகள், மறைந்த கலைஞர்களின் நினைவான காட்சிப்படுத்தல், கலைஞர்களுக்கான கௌரவிப்பு ஆகியன இடம்பெறும். (13)

### ஜயரத்தினம் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும்

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் ஜயரத்தினம் நினைவு நாளும் கனிஷ்டபிரிவுப் பரிசளிப்பு விழாவும் நாளை காலை 9.00 மணிக்கு அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவுக்குப் பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் இ.சிவகணேசனும் சிறப்புவிருந்தினராக தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (72)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் வங்கமொழித் திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலை திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் பிரபாத் ராய் இன் இயக்கத்தில் உருவான லத்தி எனும் வங்கமொழித் திரைப்படம் ஆங்கிலத்துணைத் தலைப்புகளுடன் வீடியோக்காட்சியாகக் காண்பிக்கப்படும்.

அத்துடன் வடஇந்திய சாஸ்திரிய இசை நிகழ்வு பற்றிய விவரணப்படம் ஒன்றும் காண்பிக்கப்படவுள்ளது. மேற்படி படக் காட்சிகளின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராஜா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ், காண்பித்த படம்பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் இந்நிகழ்வில் கலந்து பயன்பெறமுடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தினமும்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தினமும் இன்று மு.ப 9.30 மணிக்கு கல்லூரியின் "ரிச்வே" மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மெய்யியற்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கே.சிவானந்தமூர்த்தி கலந்து கொள்வார். நிறுவுனர் நினைவுப் பேருரையை வலிகாமம் கலவி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் ஆற்றுவார்.

இவ்விழாவில் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (207)


## சிறு விளம்பரம்

**மீட்டல் வகுப்பு**

G.C.E. (O/L) மாணவர்களுக்கான துரித மீட்டல் ஆங்கில வகுப்புக்கள், SPOKEN ENGLISH, SINHALA வகுப்புக்கள். ஆரம்பம்: 01.11.04. விலாசம்: இல.12, இராமுபிள்ளை வீதி, கொக்குவில் மேற்கு. (965)

## புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அதிபர்களே! மாணவமணிகளே!

நூலக வாரத்தை முன்னிட்டு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகமும் ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸும் இணைந்து வழங்கும்

**மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

இடம் : சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
நேரம் : காலை 9.00 மணிமுதல் 4.00 மணிவரை
நாள் : 30 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை

அனைவரையும் கலந்து பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். கடந்த 45 வருடங்களாக கல்விச் செல்வத்தை ஊட்டி லட்சக்கணக்கான வித்தகர்களை உருவாக்கிய ஸ்தாபனம்

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 222 5542 (C/3287)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சூரியா, மாதவன், சித்தார்த், திரிஷா, மீராஜஸ்மின், பாரதிராஜா நடிப்பில

**ஆய்த எழுத்து** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே)

**TYCUS**

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.45, (பி.நே)

**நாகம்ஸ்** சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான



ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பி.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.

2 ஆவது ஜனத்திரள் வாரம்
இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான
ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

**7/G ரெயின்போ காலனி**

இது ஒரு உண்மைக் கதை
பி.நே 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்




## புதுக்கடை திறப்பு விழா அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஐப்பசி மாதம் 12ம் நாள் இன்று (28.10.2004) வியாழக்கிழமை 8.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை வரும் சுபவேளையில்

**ரோசி சில்க்ஸ்**

**ROOSEE SILKS**

என்னும் ஸ்தாபனத்தை எம்மால் ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம்
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

08V பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(T.P.: 0777 286247)

ம.சரத்தர்மரட்ணம்
[கண்ணன்]

(C/3291)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையிலன்றி பேச்சுக்கள் சாத்தியப்படப் போவதில்லை!

## விடுதலைப் புலிகள் பத்திரிகை தெரிவிப்பு

**தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க - புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைதான் அடிப்படையாக அமைய முடியும். இது புலிகள் இயக்கத்தின் உறுதியான நிலைப்பாடாகும் என்று நேற்று வெளியான புரட்டாதி - ஐப்பசி மாதத்துக்குரிய, விடுதலைப் புலிகள் பத்திரிகையின் 119 ஆவது குரல் முகப்புச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சமாதானப் பேச்சுக்கள் ஆக்க பூர்வமானதாக அமைய வேண்டும் என்று சிங்கள அரசு விரும்பினால், இந்த அரசியல் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதை ஏற்க மறுப்பதென்பது சமாதான வழிமூலமான அரசியல் தீர்வுக்கு, சிங்கள அரசு தயாரில்லை என்பதையே காட்டுவதாக இருக்கும்.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான ஆவணம் சர்வதேச சட்டவல்லுனர்களின் துணையுடன் தயாரிக்கப்பட்டது.

சர்வதேச சட்டங்களையும், நியமங்களையும், ஜனநாயக பண்புகளையும் உள்வாங்கி, இலங்கைத் தீவின் அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டதாகும்.

சமாதானப் பேச்சுக்கள் முன்னரைப் போலல்லாது அர்த்தமுள்ளதாகவும் - தமிழ் மக்களின் ஆதரவுடனும் நடத்தப்பட வேண்டும்.

போரால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் மனிதாபிமான தேவைகளை மற்றும் அவர்களின் சுய பாதுகாப்பு - இயல்பான வாழ்க்கை என்பவற்றை நிறைவேற்றக்கூடிய ஒரு தற்காலிக நிர்வாக அமைப்பு முறைதான் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையாகும்.

எனவே, சந்திரிகா அரசு குற்றம் சாட்டுவதுபோல, அந்த இடைக்கால வரைபு பிரிவினைக்கான அடிப்படைகளைக் கொண்டுள்ளது என்பது உண்மைக்குப் புறம்பானதாகும்.

சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் - எந்தவித மூடிமறைப் புகளுமற்று தயாரிக்கப்பட்ட இந்த இடைக்கால வரைபை, சந்திரிகா அரசு - சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது அபத்தமானது.

இது சர்வதேச சமூகத்தையும் சந்தேகிப்பதாகவுள்ளது.

புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில்தான் பேச்சு வார்த்தைகள் அமையவேண்டும் என்பது - தமிழர்களின் அரசியல் ஆணையாகும்.

நாடாளுமன்றுக்காக அண்மையில் நடந்த பொதுத்தேர்தல் வாக்களிப்பின் வாயிலாக, தமிழ்மக்கள் இந்த ஆணையை புலிகள் இயக்கத்துக்கு வழங்கியுள்ளனர்.

எனவே, இந்த மக்கள் ஆணைக்கு சந்திரிகா அரசு மதிப்பளிக்க வேண்டும்.

அதேவேளை, புலிகளின் இந்த இடைக்கால வரைபை அடிப்படையாகக் கொண்டு, அமைதிப் பேச்சுக்களை சந்திரிகா அரசு ஆரம்பிக்க வேண்டும் என்று ஐ.தே.கட்சியே கோரியுள்ளது.

தேவையேற்பட்டால் இதற்கான நாடாளுமன்றப் பலத்தை சந்திரிகா அரசுக்கு வழங்கி உதவ தனது கட்சி தயார் என ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி அளித்துள்ளார்.

அத்துடன் தமிழ்க் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்ற பிரதான கட்சிகளும் இதையேதான் சந்திரிகா அரசுக்குக் கூறி வருகின்றன.

அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, முக்கியமான பல சிங்கள அமைப்புக்களும் புலிகளின் இடைக்கால வரைபின் அடிப்படையில் பேச்சை ஆரம்பிக்குமாறு கோரிவருகின்றன.

முன்னெப்போதும் கிடைத்திராத இந்த வரலாற்று வாய்ப்பை சந்திரிகா அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான் சமாதானத்தை நேசிப்போரின் வேண்டுகோளாக உள்ளது.

இந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபுமீது சர்வதேச சமூகமும் ஆதரவுப் போக்குடனேயே உள்ளது.

புலிகள் இயக்கத்துக்கு சர்வதேச சமூகம் வழங்கிவரும் தற்போதைய ஆதரவு இதையே வெளிப்படுத்துகிறது.

இந்த நிலையில், புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால வரைபின் அடிப்படையில் சந்திரிகா அரசு உடனடியாகப் பேச்சை ஆரம்பிப்பதே சாலச் சிறந்ததாகும்.

இதைவிடுத்து, மாற்றுத் தீர்வுத் திட்டம் ஒன்றை வரைந்து - அதன் அடிப்படையிலேயே பேச்சை ஆரம்பிக்க முயும் என்று சிங்கள அரசு பிடிவாதம் பிடிப்பது நியாயமற்றது.

வரலாற்றைப் பின்நோக்கி நகர்த்த முனையும் அந்த வீண் முயற்சிக்கு ஒத்துழைக்க புலிகள் இயக்கம் தயாராக இல்லை.

தனது தீர்வுத்திட்டத்தைப் புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறி, புலிகளுக்கு எதிராக ஒரு சர்வதேசப் பரப்புரையை அம்மையார் நடாத்தத் திட்டமிடுவதும் பயனளிக்கப்போவதில்லை.

சிங்கள அரசுகளின் அரசியல் கூத்துக்களை இனியும் தலையாட்டியவாறு பார்த்து இரசிக்கச் சர்வதேச சமூகம் தயாராக இருக்கமாட்டாது என்று தமிழ்மக்கள் நம்புகின்றனர்.

சந்திரிகா அரசை நோக்கிப் புலிகள் இயக்கம் விடுக்கும் அழைப்பு இதுதான் - 'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபின் அடிப்படையில் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்குத் துணிகரமான நகர்வுகளை, உறுதியுடன் முன்னெடுக்கவேண்டும்' என்பதுதான்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## கிரனைட்டுடன் இளைஞர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி கிரானில், 17 வயது இளைஞரொருவர் நேற்றுமுன்தினம் இரவு கிரனைட்டுடன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, வாழைச்சேனைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கிரானைச் சேர்ந்த நடராஜா சோமசுந்தரம் என்ற இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

ஓட்டோ ஒன்றில் வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பிற்குப் பயணம் செய்துகொண்டிருந்த சமயம் - வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தால், ஓட்டோ வழிமறிக்கப்பட்டு, சோதனையிடப்பட்டபோது இந்த இளைஞரிடம் கிரனைட் கண்டுபிடிக்கப்பட்டது.

ஓட்டோ சாரதியான வாழைச்சேனையைச் சேர்ந்த முஸ்தபா மொகமட் அமீர் (22) என்பவரும் கைது செய்யப்பட்டார்.

இந்த இருவரும் மட்டக்களப்பு நீதிமன்ற உத்தரவின் பேரில், எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## புனரமைக்கப்பட்ட யால சரணாலயம் திறந்துவைப்பு

(கொழும்பு)

யால தேசிய சரணாலயம மேலதிக வசதிகளுடன் நேற்று முன்தினம் மீண்டும் திறந்துவைக்கப்பட்டது.

இந்தத் தேசிய சரணாலயம் புனரமைப்பு வேலைகளுக்காக கடந்த ஒன்றரை மாதங்களாக மூடப்பட்டிருந்தது.

சுற்றுச்சூழலியல் அமைச்சர் நேற்று முன்தினம் ஜால சரணாலயத்தையும், காட்டில் வாழும் விலங்குகள் தொடர்பான நூலகத்தையும் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்ததுடன், கண்காட்சியையும் ஆரம்பித்து வைத்தார்.

சரணாலயத்தின் ஒரு பகுதியே தற்போது மீண்டும் பொதுமக்களது பார்வைக்காகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

ஏனைய பகுதிகள் புனரமைப்பு வேலைகள் முடிவடைந்ததும் திறநது வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 3500 பாடசாலைகள் மூடப்படவுள்ளதாக வெளியான செய்திக்கு கல்வி அமைச்சு மறுப்பு

நாட்டில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையிலுள்ள 3500 பாடசாலைகள் - மூடப்படவுள்ளதாக வெளியான செய்திகளை கல்வியமைச்சு மறுத்துள்ளது.

இவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையிலுள்ள பாடசாலைகள் தொடர்பாக, மாகாண சபை அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டு, அந்தப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு ஏற்கனவே நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் பாடசாலைகளின் புனரமைப்பானது நவோதயா பாடசாலைத் திட்டமாகும்.

இந்தத் திட்டம் பிரதேச செயலக ரீதியாக நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

இதன் மூலம் இந்தப் பாடசாலைகளின் தரம் உயர்த்தப்படும். மாகாண சபைகளின் நிர்வாகம் - பிரச்சினைகளுக்குரிய பிரதேசங்களிலிலுள்ள ப்பாடசாலைகளின் அபிவிருத்திக்கு மேலதிகமாக நிதியுதவியைக் கோரியுள்ளதெனவும் கல்வி அமைச்சு தெரிவித்தது.

### சர்வஜன வாக்கெடுப்பு மூலம்

## அரசியலமைப்பை மாற்றும் முயற்சியை ஐ.தே.க தடுக்கும்

### பேராசிரியர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தற்போதைய அரசியல் யாப்பைத் திருத்துவதற்கு, அரசாங்கம் முற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே - கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

இவ்வாறு மக்கள் கணிப்பின் மூலம் தற்போதைய அரசியல் யாப்பை மாற்றமுடியாது.

ஐக்கிய தேசியக்கட்சி அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

அரசாங்கம் சபாநாயகரைப் பதவியிலிருந்து நீக்க முற்படுகிறது. அத்தகைய முயற்சியைத் தடுக்க ஐக்கிய தேசியக்கட்சி சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்.

ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷி - சமாதான நடவடிக்கைகளின் எதிர்காலம் பற்றிய பேச்சுக்களை நடத்துவதற்கு இலங்கை வரவிருக்கிறார்.

ரோக்கியோ மற்றும் ஒஸ்லோ பிரகடனங்களின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுமானால், ஐககிய தேசியக் கட்சி அதற்கு ஆதரவு வழங்கும்.

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமானால், ஐக்கிய தேசியக் கட்சி சமாதான மற்றும் நல்லெண்ண இணக்கத்துக்கான ஆலோசனை சபையில் பங்குபற்றும் என அவர் மேலும் கூறினார்.

## பிக்கு மீது அந்திராக்ஸ் சந்தேகம் ஜாதிக ஹெல உறுமய கண்டனம்

கொழும்பிலுள்ள கனேடிய தூதரகத்துக்கு விசா பெறச்சென்ற பௌத்த பிக்குகள் மீது - 'அந்திராக்ஸ்' தொடர்பான சந்தேகம் தெரிவிக்கப்பட்டமை குறித்து, பௌத்த பேரினவாத கட்சியான ஜாதிக ஹெல உறுமய சீற்றமடைந்துள்ளது.

இது தொடர்பாக வெளிவிகார அமைச்சுக்கு, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. கொட்டகொல அமரகீர்த்தி தேரோ காரசாரமான கடிதமொன்றை அனுப்பி வைத்தார்.

கனேடியத் தூதரகத்துக்கு நேற்றுமுன்தினம் இலங்கை பௌத்த பிக்கு ஒருவரும், தாய்லாந்து பிக்குகள் இருவரும் விசா பெறச் சென்றிருந்னர்.

இலங்கை பௌத்த பிக்குவின் கடவுச் சீட்டில் - ஒரு வகை பவுடர் காணப்பட்டதையடுத்து, தூதரக அதிகாரிகளுக்கு 'அந்திராக்ஸ்' தொடர்பான சந்தேகம் எழுந்ததால் தூதரகம் மூடப்பட்டது.

குறிப்பிட்ட 3 பௌத்த பிக்குமார்களும் உள்ளே பாதுகாப்பு அதிகாரிகளினால் அழைக்கப்பட்டு, அவர்களது காவி உடைகள் களையப்பட்டு, சோதனைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இது தொடர்பான விடயங்களை அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கொட்டகொல அமரகீர்த்தி தேரோ-

பௌத்த நாடான இலங்கையில் பௌத்த பிக்குமாருக்கு ஏற்பட்ட இந்த அவமானத்துக்கு கனேடிய தூதரகம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

## அதாவுல்லாவுக்கு எதிராக கிண்ணியாவில் ஆர்ப்பாட்டம்!

கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சரும், தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா திருகோணமலை கிண்ணியாவுக்கு விஜயம் செய்த போது - மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் பாதுகாப்புக் காரணமாக அவர் அங்கிருந்து வெளியேற வேண்டியேற்பட்டது.

கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் கிண்ணியா பிரதேசத்துக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அவர் பல்வேறு வைபவங்களிலும் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

வீதியெங்கும் கறுப்புக்கொடி கட்டி, முஸ்லிம்கள் கறுப்புக்கொடிகளுடன் அவரது வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

கிண்ணியா பிரதேச செயலகத்தில் - அதாவுல்லா கலந்துகொள்ளும் வைபவமொன்றைத் தடுப்பதற்காக மக்கள், செயலகத்தை திறக்க விடாமல் மறியற்போராட்டம் செய்தமையினால் அவரது வருகை ரத்துச் செய்யப்பட்டது.

புதிய நூலகம் ஒன்றைத் திறந்து வைப்பதற்கும், கலாசார மண்டபம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கான அடிக்கல்லை நடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், அங்கு உருவான அமைதியற்ற சூழ்நிலை காரணமாக பாதுகாப்புத் தரப்பினரின் அறிவுறுத்தலுக்கமைய, அமைச்சர் அதாவுல்லா அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறினார்.


இதேவேளை - ஏற்பாட்டாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்குமிடையில் சிலசில இடங்களில் வன்முறைகள் இடம்பெற்றன. கலகம் அடக்கும் பொலிஸார் ஆகாய வேட்டுக்களைத் தீர்த்து வன்முறைகளைக் கட்டுப்படுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாக்பூர் டெஸ்ட் போட்டியில் இந்தியா பலோ ஒன்னை தவிர்க்க போராட்டம்!







இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நாக்பூரில் நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று - இந்தியா 5 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களை எடுத்து பலோ ஒன்னைத் தவிர்ப்பதற்காக போராடிவருகிறது.


முன்னதாக முதலில் விளையாடிய அவுஸ்ரேலியா நேற்றுமுன்தின முதல்நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 362 ஓட்டங்களை எடுத்திருந்தது. கிளார்க் 73 ஓட்டங்களுடனும், ஜிலெஸ்பி 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. கிளார்க்கும், ஜிலெஸ்பியும் தொடர்ந்து ஆடினார்கள். சகீர்கானும் அகர்கரும் தொடர்ந்து பந்துவீசினார்கள்.

ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் ஜிலெஸ்பி 9 ஓட்டங்களில் எல்.பி.டபிள்யூ ஆனார். அவரது விக்கெட்டை சகீர்கான் கைப்பற்றினார்.

அடுத்து களம்வந்த கஸ்பரோவிச் ஓட்டமெதுவும் எடுக்காமல் அகர்கர் பந்தில் விக்கெட் கீப்பர் பார்த்தீவ் பட்டேலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

கடைசி விக்கெட்டுக்கு கிளார்க்குடன், மக்ரா ஜோடி சேர்ந்தார். ஒரு முனையில் விக்கெட் விழுந்தாலும் மறுமுனையில் இருந்த கிளார்க் தொடர்ந்து சிறப்பாக ஆடினார். மக்ராவை வைத்துக்கொண்டு அவர் சதத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்.





91 ஓட்டங்களை எடுத்திருந்த போது கிளார்க், சகீர்கான் பந்தில் ஆட்டமிழந்தார். அவர் 160 பந்துகளில் 13 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். சதம் அடிக்கும் வாய்ப்பை கிளார்க் தவறவிட்டார். அவரது ஆட்டமிழப்போடு அவுஸ்ரேலியா சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அந்த அணி 100.2 ஓவர்களில் 398 ஓட்டங்களைக் குவித்தது.

சகீர்கான் 4 விக்கெட்டும், முரளி கார்த்திக் 3 விக்கெட்டும், கும்ளே 2 விக்கெட்டும், அகர்கர் ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.

பின்னர் இந்திய அணி முதல் இனிங்ஸை விளையாடியது. ஷேவாக்கும், சோப்ராவும் தொடக்க வீரர்களாக களமிறங்கினார்கள். ஜிலெஸ்பி வீசிய ஆட்டத்தின் 2 ஆவது ஓவரில் ஷேவாக் 4 பவுண்டரி அடித்து ரசிகர்களுக்கு விருந்து படைத்தார்.

ஆனால், இந்த மகிழ்ச்சி சிறிது நேரமே நீடித்தது. மக்ராவின் அபாரமான பந்தில் ஷேவாக் ஆட்டமிழந்தார். அவர் 22 ஓட்டங்களை எடுத்தார். அப்போது இந்தியாவின் ஸ்கோர் 31 ஓட்டங்களாக இருந்தது.

2 ஆவது விக்கெட்டுக்கு சோப்ராவுடன் கப்டன் ராவிட் ஜோடி சேர்ந்தார். சிறிது நேரத்திலேயே மற்றொரு தொடக்க வீரரான சோப்ரா 9 ஓட்டங்களுடன் ஜிலெஸ்பி பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து டெண்டுல்கர் களம் வந்தார்.

மதிய உணவு இடைவேளையின்போது இந்தியா 2 விக்கெட் இழப்புக்கு 35 ஓட்டங்களை எடுத்திருந்தது. ராவிட் 2 ஓட்டங்களுடனும், டெண்டுல்கர் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மதிய உணவு இடைவேளைக்கு பிறகு டெண்டுல்கர் 'அவுஸ்ரேலிய வீரர்களின் பந்துவீச்சுக்குத் திணறினார்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட டெண்டுல்கர் 8 ஓட்டங்களுடன் ஜிலெஸ்பி பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அப்போது ஸ்கோர் 49 ஆக இருந்தது. அடுத்து லக்ஷ்மன் வந்தார்.

ஸ்கோர் 75 ஆக இருந்தபோது லக்ஷ்மன் ஆட்டமிழந்தார். அவர் 13 ஓட்டங்களே எடுத்தார். அடுத்து 5 ஆவது விக்கெட்டுக்கு ராவிட்டுடன் கைஃவ் களமிறங்கினார். இருவரும் நிதானமாக விளையாடினர்.

இந்திய அணியின் ஸ்கோர் 103 ஆக இருக்கும்போது ராவிட் 21 ஓட்டங்களை எடுத்த நிலையில் மக்ரா பந்தில் வோனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 140 பந்தில் 2 பவுண்டரியுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். அடுத்து பட்டேல் களமிறங்கினார்.

இருவரும் நிதானமாக விளையாடினர். 2 ஆவது நாள் ஆட்டமுடிவில் இந்தியா 77 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 146 ஓட்டங்களை எடுத்துள்ளது. கைஃவ் 47 ஓட்டங்களுடனும், பட்டேல் 16 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

அவுஸ்ரேலியா தரப்பில் மக்ரா, ஜிலெஸ்பி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், வோன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தியாவிற்கு பலோ ஒன்னைத் தவிர்க்க இன்னும் 52 ஓட்டங்கள் தேவை.

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை உதைபந்தாட்ட அணிகளிடையே நடைபெற்று வருகின்ற சிநேகபூர்வ உதைபந்தாட்ட போட்டித்தொடரில், கடந்த செவ்வாய்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும்- சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் இரு பிரிவுகளில் யாழ்ப்பாண கல்லூரி அணி வெற்றி பெற்றது. மற்றைய பிரிவுப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த உதைபந்தாட்டப் போட்டியில் 1 ஆம் பிரிவில் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி 3-2 என்ற கோல் கணக்கிலும், 2 ஆம் பிரிவில் - யாழ்ப்பாணக்கல்லூரி அணி 1-0 என்ற நிலையிலும் வெற்றி பெற்றது. 3 ஆம் பிரிவுப் போட்டி 1-1 என்ற நிலையில் சமநிலையில் முடிவடைந்தது.

மழைத் தூறல்களுக்கு மத்தியில் மைதானத்தில் நீர் இருந்த நிலையிலும் நடைபெற்ற இரு கல்லூரிகளுக்கும் இடையிலான உதைபந்தாட்ட போட்டிகளில் மைதானத்தில் நீர் நிரம்பி காணப்பட்டமையால் -

இரு கல்லூரி அணிகளுமே பல்வேறு கோல் அடிக்கும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டமையினை இந்தப் போட்டிகளின் பொழுது அவதானிக்கக்கூடியதாக இருந்தது.(58)

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளிடையே நடைபெற்று வந்த சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப்போட்டிகள் நாளை நடைபெறவுள்ளன.

வடக்கின் பெரும் போட்டியினை ஆடிவரும் யாழ். மத்தியகல்லூரிக்கும் - சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி, சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் 1,2,3 ஆம் பிரிவுகளுக்கு இடையில் மாலை 2.00 மணி முதல் நடைபெறவுள்ளது.

பொன் அணிகளின் போர் போட்டியினை ஆடி வரும் யாழ்ப்பாண கல்லூரி அணிக்கும் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி 1.30 மணி முதல் நடைபெறவுள்ளது. இதில் 14 வயதுப்பிரிவு, 16 வயதுப்பிரிவு, 18 வயதுப்பிரிவு, 20 வயதுப்பிரிவுகளிடையே போட்டிகள் நடைபெறவுள்ளன.

(58)

# மார்ட்டின் குரோவை முந்தினார் பிளமிங்!



நியூஸிலாந்து கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர் மார்ட்டின் குரோ. 77 டெஸ்டில் 5,444 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இவரது ஓட்டங்களை நேற்று பிளமிங் முந்தினார்.

பங்களாதேஷிற்கு எதிராக கடந்த திங்கட்கிழமை சிட்டகொங்கில் தொடங்கிய 2 ஆவது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து கப்டன் பிளமிங் மிகவும் அபாரமாக விளையாடி 202 ஓட்டங்களை எடுத்தார். இதன்மூலம் அவர் மார்ட்டின் குரோவை முந்தி அதிக ஓட்டங்கள் எடுத்த நியூஸிலாந்து வீரர் என்ற சாதனையில் உள்ளார்.

பிளமிங் 87 டெஸ்டில் 5,566 ஓட்டங்களை எடுத்துள்ளார். மேலும் அதிக டெஸ்டில் விளையாடிய நியூஸிலாந்து வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். இதற்கு முன்பு ரிச்சட் ஹேட்லி அதிகபட்சமாக 86 டெஸ்டில் விளையாடியுள்ளார்.




# உதைபந்தாட்ட வீரர்களுக்கு நான்கு நாள் பயிற்சிப் பட்டறை!



யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 15 பிரதேச செயலகங்களிலுமிருந்து தலா இரண்டு பேர் வீதம் தெரிவு செய்யப்பட்ட உதைபந்தாட்ட வீரர்களுக்கான 4 நாட்கள் கொண்ட பயிற்சிப் பட்டறையின் நிறைவு நாள் நிகழ்வு - நேற்று யாழ். மாவட்ட விளையாட்டு பொறுப்பதிகாரி தலைமையில் யாழ். பொது மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமி கலந்துகொண்டு - நான்கு நாட்கள் தங்கியிருந்து பயிற்சிகளையும், விரிவுரைகளையும் நிறைவுசெய்த வீரர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

# பங்களாதேஷுடனான 2 ஆவது டெஸ்ட் நியூஸிலாந்து 545 ஓட்டங்கள் குவிப்பு!

நியூஸிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் சிட்டகொங்கில்

## உதைபந்தாட்டப் போட்டி

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்றுகாலை 8.30 மணிக்கு 16 வயதுப் பிரிவில் - தெல்லிப்பளை யூனியன் கல்லூரியை எதிர்த்து, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியும், 18 வயதுப் பிரிவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன.

இன்று பிற்பகல் 2.00 மணிக்கு இதே மைதானத்தில் 16 வயதுப் பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து அராலி இந்துக் கல்லூரியும் - 18 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதவுள்ளன.(72)



நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இரண்டாம் நாளான நேற்று நியூஸிலாந்து தனது முதல் இனிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 545 ஓட்டங்களைக் குவித்து தனது முதல் இனிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பங்களாதேஷ் பந்துவீச்சாளர்களின் பந்துகளை நியூஸிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் பொருட்படுத்தாமல் ஓட்டங்களைக் குவித்தனர்.

இதன்படி அவ்வணி சார்பாக றிச்சட்ஸன் 28, சின்கிளேயர் 23, பிளெமிங் 202, ஸ்ரைஸ் 89, அஸ்ரில் 39, மார்ஷல் 69, ஓரம் மற்றும் மக்கலம் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 38, 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மொகமட் ரபீக் 3, இனாமுல் கயூக் 2, ராஜின் சாலே ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது முதல் இனிங்ஸை நேற்றுத் தொடங்கிய பங்களாதேஷ் அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அவ்வணி சார்பாக நபீஸ் இக்பால் 13, அப்ரப் அகமட் 20, ராஜின் சாலே 2 ஓட்டங்களையும், ஜாவிட் ஓமர் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் விற்ரோறி 2, வைஸ்மன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடக்கரை வாய்க்காலை திருத்துமாறு கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஓடக்கரை வாய்க்காலைத் திருத்தித்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததையடுத்து, குறிப்பிட்ட வெள்ள வாய்க்காலை நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இ. தயா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன், பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உட்பட்ட குழுவினர் பார்வையிட்டனர்.

இந்த வீதியால் ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள் கடற்தொழிலாளர்கள், பொதுமக்கள் உட்படப் பலர் போக்குவரத்துச் செய்கின்றனர். மழைபெய்தால் இந்த இடத்தில் 11/2 அடிக்கு மேலாக தண்ணீர் நிற்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வாய்க்காலை உடனடியாகத் தற்காலிகமாகத் திருத்தம் செய்துதருவதாகவும், அடுத்தாண்டு இந்த வீதிக்கான நிதியை தாம் ஒதுக்கீடுசெய்து வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதாகவும் சம்பந்தப்பட்டவர்களால் பொதுமக்களுக்கு உறுதியளிக்கப்பட்டது. (12)

# கலைஞர்களின் படங்களை வைத்திருப்போர் கவனத்துக்கு!

கரவெட்டி பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் கலாசார விழா எதிர்வரும் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த விழாவில் இச்செயலகப் பிரிவைச்சேர்ந்த மறைந்த கலைஞர்களின் புகைப் படங்கள், வெளிப்பாடுகள், ஆக்கங்கள் என்பனவற்றைச் சேகரித்து, கண்காட்சி நிகழ்வொன்றை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தக் கண்காட்சியில் வைக்கக்கூடிய கலைஞர்களின் புகைப்படங்கள், வெளிப்பாடுகள், ஆக்கங்கள் என்பவற்றை வைத்திருக்கும் அன்பர்கள் தயவுசெய்து கரவெட்டிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் உடனடியாகத் தொடர்புகொண்டு விழாவைச் சிறப்பிக்க உதவுமாறு கரவெட்டி பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# அரியாலை பகுதியில் மினிபஸ்கள் தாக்கப்பட்டன

அரியாலையில் கடந்த வியாழனன்று கும்பல் ஒன்றினால் மினிபஸ்கள் தாக்கப்பட்டு, அவற்றின் கண்ணாடிகள் சிலவும் சேதமாக்கப்பட்டன.

இந்தச் சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது -

அரியாலையில் கடந்த திங்களன்று நடந்த விபத்து ஒன்றில் பலியானவரின் மரணச்சடங்கு அரியாலை மாம்பழம் சந்தியில் இடம்பெற்றது. இந்த இறுதி ஊர்வலத்தில் பெருந்திரளானோர் கலந்துகொண்டவேளை, வீதிப்போக்குவரத்துகள் தடைப்பட்டிருந்தன.

அதேவேளை, இந்த வீதியால் செல்லமுற்பட்ட வாகனங்களில் சில மரண ஊர்வலத்துக்குத் தடை எனக்கருதி அந்தப்பகுதியில் நின்ற கும்பல் ஒன்றினால் கற்களால் தாக்கப்பட்டன. இதனால் அந்த வாகனங்களின் கண்ணாடிகள் சில சேதமாகின.

இதன் காரணமாகக் கண்டி வீதியில் பயணித்த ஏனைய வாகனங்கள் அரியாலை கனகரட்ணம் வீதி, செம்மணி வீதியூடாகவே போக்குவரத்துச் செய்தன. (55)

# நாவலர் குருபூசையை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்!

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 125 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை - பாடசாலை மாணவரிடையே கட்டுரை, பேச்சுப்போட்டி ஆகியவற்றை நடத்தவுள்ளது.

**பேச்சுப்போட்டி**

கீழ்ப்பிரிவு (தரம் 6, 7, 8) 'நாவலரைப்போல நமக்காளில்லை' எனும் தலைப்பில் 5 நிமிடங்களிலும் -

மத்திய பிரிவு (தரம் 9, 10, 11) 'நாவலரும் தமிழகமும்' எனும் தலைப்பில் 7 நிமிடங்களிலும் -

மேற்பிரிவு (தரம் 12, 13) 'நாவலர் நூலாசிரியர், பதிப்பாசிரியர்' எனும் தலைப்பில் 10 நிமிடங்களிலும் உரையாற்றலாம்.

**கட்டுரைப்போட்டி**

பங்குபற்றும் தரம் 12,13 -நேரம் ஒரு மணித்தியாலயம் - நாவலர் பெருமானின் வாழ்க்கை வரலாறுடன் தொடர்புள்ள தலைப்பு போட்டி நாளன்று வழங்கப்படும்.

பேச்சுப்போட்டி 14.11.2004 அன்று காலை 9 மணிக்கு நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கட்டுரைப்போட்டி 21.11.2004 அன்று காலை 9 மணிக்கு நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். குறிப்பிட்ட பிரிவுகளில் முன்பு பங்குபற்றிப் பரிசுபெற்றவர்கள் இந்த வருடம் கலந்துகொள்ளமுடியாது. வெற்றி பெற்றோருக்கு 4.12.2004 இல் பரிசு வழங்கப்படும்.

ஒரு பாடசாலையிலிருந்து ஒரு பிரிவுக்கு ஒருவர் தோற்றலாம். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி - கௌரவ தேர்வுச் செயலர், 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். விண்ணப்பம் அனுப்பும் இறுதித் திகதி 31.10.2004 ஆகும்.

# யாழ்.வலய ஆசிரியர்களுக்கான எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்.வலயப் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் கற்கும் மாணவரிடையே எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக யாழ்.மாவட்ட எச்.ஐ.வி.தடுப்பு இயக்கத்துடன் இணைந்து யாழ்.கல்வி வலயத்தால் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கு நாளையும், நாளை மறுதினமும், ஞாயிற்றுக் கிழமையும் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியிலும், க.பொ.த (உ/த) வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 30 ஆம், 31 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (58)

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஆன்மீக சொற்பொழிவு

(நல்லூர்)

நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் சொற்பொழிவுத் தொடரில், நாளை மாலை 6 மணிக்கு சிவஸ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) சைவப்புலவர் அனுஷானந்தன், எஸ்பாலசண்முகன், ஆசிரியை எஸ்.தட்சாயினி, ஆசிரியர் ச.லலீசன், கந்த.சத்தியதாஸன் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

## வண்ணை நாவலர் மகா வித்தியாலய பரிசளிப்புவிழா

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நினைவுப் பேருரை நிகழ்வும், பரிசுத்தினமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ந.சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - சைவப்புலவர் வ.கந்தசாமி முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். நினைவுப் பேருரையை கலாநிதி மா.வேதநாதன் நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் பாலபாடம் (மறுபதிப்பு) வெளியீடும் அன்றையதினம் நடைபெறவுள்ளது. அதனை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் வெளியிட்டுவைககவுள்ளார்.

## சுகாதாரமற்ற நிலையில் இயங்கும் உணவகங்கள்

அரியாலையில் உள்ள சில உணவகங்களில் சுத்தம் பேணப்படவில்லை என அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த உணவகங்களில் இலையான்கள் மொய்க்கப்பட்ட உணவுகளை வழங்குவதோடு, உணவுகள் மூடபபடுவதில்லை எனவும் - கை, வாய் கழுவும் இடங்களில் சுத்தம் பேணப்படுவதில்லை எனவும், இவற்றால் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து பொதுசுகாதார பரிசோதகர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மக்கள் தெரிவித்தனர். (55)

## உழவு இயந்திரத்திலிருந்து விழுந்து ஒருவர் காயம்

ஓடிக்கொண்டிருந்த உழவு இயந்திரத்தில் இருந்து தவறிவிழுந்து இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கெற்பலி மேற்கைச் சேர்ந்த செ.கிருஷ்ணபவன என்பவரே காயமடைந்தவராவர்.(29)

## நூல்கள் அறிமுகவிழா

கலாநிதி ம.இரகுநாதனின் ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள், கலாநிதி சி. செல்வரஞ்சிதத்தின் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் 'நூல்களும் மதிப்பீடும்' நூல்கள் அறிமுகவிழா இன்று மாலை 3 மணிக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

'ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்' நூலுக்கான அறிமுக உரையை கலாநிதி செ. திருநாவுக்கரசும், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை 'நூல்களும் மதிப்பீடும்' நூலுக்கான அறிமுக உரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸூம் நிகழ்த்தவுள்ளனர்.

## மண்ணெண்ணெய் தாங்கியில் துவாரம்

கடந்த மாதத்தில் நெல்லியடி எரிபொருள் நிலையத்தின் மண்ணெண்ணைத் தாங்கியில் துவாரம் ஏற்பட்டதால் எண்ணெய்க்கசிவு ஏற்பட்டுள்ளது. இதனால் சில்லறைக்கு மண்ணெண்ணை விற்க மறுத்ததால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அடைந்துள்ளனர். இது சம்பந்தமாக முகாமையாளருக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததையடுத்து மண்ணெண்ணை தாங்கி புதிதாக கொள்வனவு செய்வது சம்பந்தமான நடவடிக்கைகள் எடுகப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார். (12)

## கலாசார மண்டபம் திறந்துவைப்பு

பருத்தித்துறை திக்கத்தில் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் அமைக்கப்பட்ட கலாசார மண்டபம் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன், எஸ்.கஜேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (14)

## காலாவதியான பொருட்கள் அழிப்பு

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட சுகாதாரப் பரிசோதகர்கள், கச்சாய் வீதியில் உள்ள தனியார் வர்த்தக நிலையமொன்றிலிருந்து காலாவதியான பிஸ்கற் வகை, ஜாம், டோஸ், சோயாமீற், மிக்சர் என்பவற்றைக் கைப்பற்றி அழித்தனர். (29)

## சனி, ஞாயிறு தினங்களிலும் கடைகளைத் திறக்கலாம்.

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களை சனி, ஞாயிறு தினங்களிலும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் என சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற தலைவர் எஸ்.அருளானந்தம் தெரிவித்தார். (29)

## பற்சுகாதார வார கருத்தரங்கு

(சுதுமலை)

வண்ணார்பண்ணை ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்தால் பற்சுகாதார வாரத்தை முன்னிட்டு 'பற்சுகாதாரமும் பராமரிப்பு முறையும்' என்ற கருத்தரங்கு நாளை மாலை 4 மணிக்கு சனசமூகநிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஜே/88 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கான இந்தக் கருத்தரங்கில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆறுமுகதாஸ் கருத்துரைகளை வழங்குவார். (91)

**இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

இரண்டாவது அகவையில்



பெயர் : பா.கிருஷ்ணவாணி
முகவரி : கொடிகாமம்

இரண்டாவது அகவையில்



பெயர் : [illegible]
முகவரி : [illegible]

# வடமராட்சி அதிபர்களுக்கு தொடர்பாடல்திறன் செயலமர்வு

(நெல்லியடி)

வடமராட்சி வலய அதிபர்களுக்கான 'தொடர்பாடல்திறன்கள்' என்ற தலைப்பிலான செயலமர்வு வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு இன்றும், நாளையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள வடமராட்சி வலய ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. வடக்கு-கிழக்கு மாகாண அதிபர்களுக்கான செயற்திட்ட இணைப்பாளர் என். சந்திரகாந்தன், பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.புஸ்பலிங்கம் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (12)

# விஞ்ஞானதினத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்!

(யாழ்ப்பாணம்)

நவம்பர் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு யாழ்.கல்வி வலய வெளிக்கள நிலையத்தால் வினாடிவினா மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வினாடிவினா போட்டியானது 6-8 தரங்களுக்கு ஒரு பிரிவாகவும், 9-11 ஆம் தரங்களுக்கு இன்னொரு பிரிவாகவும் இரண்டு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

கட்டுரைப் போட்டிகள் 12 ஆம், 13 ஆம் தர மாணவரிடையே நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கட்டுரைப் போட்டிகள் நவம்பர் மாதம் 4 ஆம் திகதியும், வினாடி வினாப் போட்டிகள் நவம்பர் மாதம் 5 ஆம் திகதியும் நடைபெறுமென யாழ்.வலய வெளிக்கள நிலையத்தினர் யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளனர். (58)



பருத்தித்துறை பிரதேச சபை நடத்திய முதியோர்தின, விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் - முதியவர் ஒருவருக்கு பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனங்களுக்கேற்ப வேறுபடும் கோவாவின் அறுவடைக் காலம்



கோவாவில் பல இனங்கள் காணப்படுகின்றன. உயரம் குறைந்த பிரதேசங்களில் பயிரிடுவதற்கென சில கோவா இனங்கள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. நெற்தரைகளில் போகங்களுக்கிடையே கோவாவைப் பயிரிடும் விவசாயிகளுக்கு, குறுகிய கால கோவா இனங்கள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. விவசாயிகள் உரிய இனக் கோவாவை ஆலோசனைகளுக்கமைய பெற்றுக் கொள்ள முடியும்.

**நாற்று மேடை**

ஒரு ஏக்கருக்குப் போதுமான நாற்றுக்களை 200 கிராம் விதையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தாழ் நிலப் பிரதேசங்களில் 3-4 வாரப் பருவ நாற்றுக்களையும், உயரமான பிரதேசங்களில் 4-6 வாரப் பருவ நாற்றுக்களையும் நடுகைக்குப் பயன்படுத்தவும்.

**தரை தயாரித்தல்**

தரையை 20 சென்றி மீற்றர் ஆழத்துக்கு உழுது, பண்படுத்தவும். இந்தத் தரையில் ஒரு மீற்றர் அகலமான மேடைகளை அல்லது 60 சென்றி மீற்றர் இடைவெளி கொண்ட வரம்புகளை அமைக்கவும். மேடைகளைத் தயாரித்தவுடன் நன்கு உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு போன்ற சேதன உரத்தை 5 தொன் 4 ஆயிரம் சதுர மீற்றர் (ஏக்கர்) உபயோகித்து, மண்ணுடன் கலந்து விடவும். வரம்பு அமைப்பதால், வரம்பை அமைப்பதற்கு முன் அதேயளவு சேதனப் பசளையைப் பிரயோகித்து மண்ணுடன் நன்கு கலக்கவும்.

**நடுகை**

கோவா நடுகையின் முன் வீங்கிய வேருள்ள நாற்றுக்கள் காணப்படுகின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். இந்த நிலைமை கோவா நாற்றுக்கள் குண்டாத்தடி நோயால், தாக்கப்பட்டுள்ளதைக் குறிக்கும். நாற்று மேடையில் ஒரு நாற்றேனும். குண்டாந்தடி நோயால் தாக்கப்பட்டிருந்தாலும், அந்த மேடையிலிருந்து நாற்றுக்களைப் பெறக்கூடாது. நடுகை இடைவெளி 50x40 சென்றி மீற்றர்.

**பசளைப் பிரயோகம்**

அடிக்கட்டாக சந்தையில் விற்கப்படும் இலை, மரக்கறிகளுக்கான உரக்கலவையைப் பிரயோகிக்கலாம்.


**மேற்கட்டும் பிரயோகம்**

கோவாவை நட்டு 4-5 வாரங்களின் பின்னர் யூரியா 100 கிலோகிராம் 4 ஆயிரம் சதுர மீற்றர் (ஏக்கர்) வீதம் பிரயோகிகவும்.

**கோவாவைத் தாக்கும் பூச்சிகள்**

*** வெட்டுப்புழு**

நடுகையின்போது, வெட்டுப்புழு பிரச்சினையாக இருந்தால், இவற்றைக் கட்டுப்



படுத்துவதற்குச் சிபாரிசு செய்யப்பட்ட பூச்சிநாசினி ஒன்றை விசிறவும். கடந்த காலத்தில் இந்தப் புழுக்களின் பிரச்சினை மிகத் தீவிரமாகக் காணப்பட்டிருக்குமானால், நடுகையின் முன் நாற்றுக்களை தகுந்த பூச்சிநாசினி கரைசல்களுள் ஒன்றில் அமிழ்த்தி எடுத்தல் வேண்டும். சேதம் அவதானிக்கப்பட்டால், பயிரைச் சுற்றி நிலமட்டத்துக்குக் கீழுள்ள மண்ணில் காணப்படும் புழுக்களைப் பொறுக்கி அழித்தல் வேண்டும்.

*** இலையரி புழுக்கள்**

**டயமண்ட் முதுகு அந்து**

சிபாரிசு செய்யப்பட்ட பூச்சிநாசினிகளுள் ஒன்றை விசிறி, இவற்றைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். இலைகள் நன்கு நனையும் வண்ணம் நாசினிக் கரைசலை விசிறவும். நட்டு 2-3 வாரங்களின் பின், விசிறலை ஆரம்பிக்கலாம். அறிவுரைகளுக்கு அமைய, அறுவடைக்கு முன்னர் நாசினியை விசிறுவதை நிறுத்த வேண்டும். சாதாரணமாக 2-3 முறை விசிறினால் போதுமானதாகும்.

**நோய்களும் தடுப்பு முறைகளும்**

**1. குண்டாந்தடி நோய்**

கோவாப் பயிர்ச்செய்கையில் மிகப் பரவலாகவும், பிரச்சினையாகவும் காணப்படுவது குண்டாந்தடி நோயாகும். இந்த நோயின் தாக்கத்தால் - வேரில் காய்களும், வீக்கமும் உண்டாகின்றது. ஒரு தடவை மண்ணில்

இந்தப் பங்கசின் தாக்கம் ஏற்படுமானால், அந்தத்தரையிலிருந்து பங்கசை அகற்றுவது கடினமாகும். தாக்கப்பட்ட பயிர்கள் வாடிய தோற்றத்தைக் கொண்டிருக்கும்.

இந்த நோய் ஏற்படக்கூடிய நிலைமையைக் குறைப்பதற்கு 2 தொன் 4 ஆயிரம் சதுர மீற்றர் வீதம் சுண்ணாம்பை, குறைந்தது நடுகைக்கு ஈர வாரங்களுக்கு முன் பிரயோகித்து நிலத்தை ஈர நிலையில் வைத்திருக்கவும். எனினும், நோய் காணப்படும் நாற்று மேடைகளிலிருந்து அல்லது தரைகளிலிருந்து இந்தப் பங்கசு பரவாமல் பாதுகாப்பது மிக முக்கியமாகும். சுண்ணாம்பு இடுவதால் இந்தநோயின் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ள முடியுமாயினும், அதை முற்றாக அகற்ற முடியாது.

பயிர் அடிக்கட்டைகளைப் பிடுங்கி அழித்தல் போன்ற தோட்டச் சுகாதார முறைகளையும், பயிர்ச் சுழற்சி முறைகளையும் கைக்கொள்வதாலும் இந்த நோயைக் குறைத்துக் கொள்ளலாம்.

**2) கரிய அழுகல்**

நீர் வடிப்பற்ற தரைகளிலேயே இந்த நோய் பொதுவாகக் காணப்படுகிறது. இந்த நோயால் ஆரம்பத்தில் இலைகளின் ஓரங்கள் வாடிக் கருக ஆரம்பித்து, பின் மத்திய பகுதிக்கும் பரவும். தாக்கத்தின் இறுதியில் இலைகள் உதிர ஆரம்பிக்கும். இதேவேளையில் தண்டும் கபில நிறமாக மாறி அழுகும்.

தோட்டச் சுகாதாரம், சிறந்த நீர் வடிப்பு, பயிர்ச் சுழற்சி போன்றவற்றால் இந்த நோயைக் குறைத்துக் கொள்ளலாம்.

**3) கோவா மஞ்சள்**

நாற்று மேடைப் பருவம் முதல் அறுவடை வரை எக்காலத்திலும் இந்த நோய் தோன்றக் கூடும். வளர்ச்சி குன்றல் தாவரத்தின் ஒரு பக்க இலைகள் மஞ்சள் நிறமடைதல், பயிர் காய்ந்திருத்தல் போன்றன இந்த நோயின் அறிகுறியாகும்.

இந்த நோயால் தாக்கப்பட்ட பயிர்களை உடனடியாகப் பிடுங்கி அழிக்க வேண்டும்.

**4) இலைப் புள்ளி**

கோவா முட்டைப் பருவமடைந்த பின், வெளி இலைகளில் இந்த நோயின் அறிகுறிகளை அவதானிக்கலாம். முட்டைகள் உருவாகும் ஆரம்ப காலத்தில் உற்பத்தியாளர்களின் சிபார்சுப்படி பூஞ்சன நாசினிகளை விசிறுவது இலாபகரமானதாகும். முட்டை முற்றாக உண்டாகியபின் விசிறிப் பயனில்லை.

**அறுவடை**

இனங்களுக்கு ஏற்ப அறுவடைக் காலம் வேறுபடும். அறுவடையின்போது, கோவா முட்டைகள் இறுக்கமாகவும், நன்கு நிலை பெற்றும் இருத்தல் வேண்டும். அறுவடை காலம் தாழ்த்தப்படும்போது, கோவா முட்டைகள் வெடிக்க ஆரம்பிப்பதனால், அவற்றின் தரம் குறைகின்றது. பயிரிடப்படும் இனங்களுக்கும், இடத்துக்கும் ஏற்ப விளைவு வேறுபடும். பொதுவாக உயரமான இடங்களில் உயர் விளைச்சல் பெறக் கூடியதாக இருக்கும்.

# நாற்று மேடையமைப்பில் தங்கியுள்ள பல்லினப் பயிர்ச்செய்கை முறை!

*(சென்றவாரத் தொடர்ச்சி....)*

நாற்றுக்கள் உடனடியாகச் சூரிய ஒளியால் தாக்கப்படாமலிருக்க, பத்திரக் கலவையை மாலையில் அகற்ற வேண்டும். களைகள் தோன்றும்போது, அவற்றை கிரமமாக நீக்க வேண்டும்.

நாற்று மேடைக்குக் கிரமமாக நீரூற்றவும், கூட்டெரு கலக்கப்பட்டிருக்குமாயின், உரக் கலவை எதுவும் பிரயோகிக்க வேண்டிய அவசியமில்லை. எனினும், பயிர்களின் வளர்ச்சி குறைவாகக் காணப்படுமானால், வசதிப்படும் திரவ உரக்கலவையைச் சிபார்சுக்கமையப் பாவிக்கலாம். பெருமழை எதிர்பார்க்கப்படுமானால், மேடையை பொலித்தீன் அல்லது சீலை அல்லது கிடுகினால் மூடவேண்டும்

நாற்றுக்கள் இலையரி புழுக்களினால் தாக்கப்படக் கூடும். அதனால், மேடைகளை ஒழுங்காக அவதானித்து, சரியான வேளையில் உரிய கிருமிநாசினியைப் பிரயோகிக்கவும். மேடைகள் சரியான முறையில் எரிக்கப்படாதுபோனால், நாற்றுக்கள் பூஞ்சண நோய்களால் தாக்கப்பட்டு, பெருமளவில் அழியக் கூடும். மேடைகள் நன்றாக எரிக்கப்படாது போனால், நடுகையின் முன் அல்லது நடுகையின்போது பூஞ்சண நாசினி ஒன்றைப் பயன்படுத்தலாம்.

பெரும்பாலான நோய்கள் மண்மூலம் அல்லது விதை மூலம் பரவுவதால் நடுகையின் முன் விதைகளையும் தொற்று நீக்குவது விரும்பத்தக்கது.

மேடைக்க நிழல் போடப்பட்டிருந்தால் நாற்றுக்களைப் பிடுங்குவதற்கு முன்னர், அவை வைரமடையச் செய்வதற்காக நிழலைப் படிப்படியாக அகற்றுதல் வேண்டும். சிறந்த நோயற்ற நாற்றுக்களை மட்டும் நடுகைக்குத் தெரிவு செய்ய வேண்டும்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | நெல்லியடி | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 80/= | 90/= | 100/= | 70/= | 65/= | 60/= | 60/= |
| வெண்டிக்காய் | 40/= | 30/= | 40/= | 30/= | 30/= | 25/= | 30/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 60/= | 60/= | 70/= | 70/= | 70/= | 60/= | 70/= |
| கத்தரிக்காய் | 60/= | 80/= | 70/= | 60/= | 60/= | 60/= | 80/= | 70/= |
| பாகற்காய் | 80/= | 100/= | 80/= | 90/= | 100/= | 90/= | 80/= | 80/= |
| கரட் | 60/= | 60/= | 50/= | 40/= | 40/= | 50/= | 60/= | 40/= |
| பீற்றூட் | 30/= | 20/= | 30/= | 40/= | 20/= | 20/= | 40/= | 30/= |
| முருங்கைக்காய் | 60/= | 70/= | 100/= | 100/= | 60/= | 60/= | 120/= | 40/= |
| வெங்காயம் | 60/= | 50/= | 40/= | 50/= | 50/= | 40/= | 40/= | 60/= |
| பச்சை மிளகாய் | 50/= | 60/= | 40/= | 45/= | 60/= | 40/= | 50/= | 50/= |

# கற்றாளை

## மருத்துவக் குணம் நிறைந்தது



கற்றாழையானது சோற்றுக் கற்றாழை, பிள்ளைக் கற்றாழை எனவும் அழைக்கப்படுகிறது. இதனது மடல், வேர் என்பன மருத்துவக் குணமுடையவை. கற்றாழை சதைப் பற்றாகவும், விளிம்பில் முள்ளும் உள்ள மடல்களை உடையது.

கற்றாழையை உணவுக்காக எடுக்கும் போது, இலையின் தோல் பகுதியை நீக்குதல் முக்கியமாகும். இலையின் உட்புறச்சதை, சாறு என்பன உணவாக உபயோகப்படுத்தக்கூடியவை.

இதில் ஈரத்தன்மை 96 வீதம் அடங்கியுள்ளது. போசாக்குகளும், உடலுக்கு அத்தியாவசியத் தேவையான அமினோ அமிலங்கள், கனிப்பொருட்கள், விட்டமின் ஏ,பீ,சீ என்பன அடங்கியுள்ளன.

கற்றாழை மூலம் தயாரிக்கப்படும் எண்ணெய் கற்றாழை வேர், இலைகளில் காணப்படும் சாறு என்பன பலவிதமான நோய்களுக்கு அருமருந்தாக விளங்குகின்றது.

அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பின், தீக் காயங்கள், நாள் பட்ட புண்களை விரைவில் குணமாக்கும் தன்மை கற்றாழைக்கு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால், இதைப் பயன்படுத்தி 'கிரீம்கள்' தயாரிக்கப்படுகின்றன. கற்றாழைச் சாற்றில் அலோக்டின் 'பி' என்னும் பொருள், நோய் எதிர்ப்பு சக்தியை தூண்டக்கூடியதாகச் செயற்படுவதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

சசி சந்திரகாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# தொழில்மலர்

# கிரெடிட்காட் திருட்டுக்கள் நவீன வணிகத்தைப் பாதிக்குமா?

இணையமானது இன்று பல்வேறு மனித தேவைகளை இலகுவாக்கியுள்ளது. கடன் அட்டை - வணிகத்தையும் மக்கள் மத்தியில் பிரபல்யமடைய வைத்துள்ளது. ஆனால், இந்தக் கடன் அட்டை வணிகமானது இணையத்தில், இணையத்திருடர்களான ஹக்கர்ஸ் குழுவால் திருட்டுப்போகும் சம்பவங்கள் இப்போது அதிகரித்துள்ளது.

நாம் இணைய வணிகத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு மாஸ்ரர் காட், விசாகாட் போன்ற வர்த்தகப்பெயர்கள் கொண்ட பல்வேறு கடன் அட்டைகளைப் பயன்படுத்துகிறோம். இதே போல் வரவு அட்டை, மாற்றீடு அட்டை என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன.

இத்தகைய கடன் அட்டைகளை நாம் கொடுப்பனவுக்காக, இரகசியக் குறியீட்டு எண்களை இணையத்ினூடாகப் பரிமாறிக் கொளகின்றபோது, அவை திருட்டுப் போகின்றன. இத்தகைய திருட்டை மேற் கொள்பவர்கள் சாதாரணமானவர்கள் இல்லை. இவர்கள் கணினி தகவல் தொழில் நுட்பத்தை நன்கு அறிந்த கணினி நிபுணர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு திருடப்படுகின்ற விபரங்களைக்கொண்டு, அவர்கள் பெறுமதியான பொருட்களை திருட்டுத்தனமாகக் கொள்வனவு செய்கின்றனர். இதனால், குறிப்பிட்ட கடன் அட்டைக்குரியவரின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கிலேயே இந்தப் பொருட்களுக்கான பணம் அறவிடப்படுகிறது. அதாவது குறிப்பிட்ட கடன் அட்டைக்குரியவரின் வங்கிச் சேமிப்பு குறிப்பிட்டவருக்குத் தெரியாமலேயே திருட்டுப் போகின்றது. எனவேதான் இவர்களுக்கு எதிராக சைபர் வியாபாரிகளும், கிரடிட் காட் நிறுவனங்களும் போராட வேண்டியுள்ளது.

கடன் அட்டை என்றால், அவை இணையத்தில் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றதோ அல்லது இணையத்தில் மட்டுமே திருடப்படலாம் என்றோ எண்ணுவது தவறானதாகும். இவை சாதாரண வியாபார நிறுவனங்கள், உணவகங்கள், எரிபொருள் நிலையங்கள் என்பவற்றில் பயன்படுத்தப்படுவதோடு, அங்கேயும் திருட்டுப் போகின்றன.

இணையத்தின் மூலம் பொருட்கள் சேவைகளைப் பெறும் நோக்கோடு மட்டுமல்லாது,



இணையத்தொலைபேசிக் கட்டணம், கணினி மென்பொருள் கொள்வனவு, மின்சாரக்கட்டணம், சோலைவரி என்பன செலுத்தப்படுவதால் கடன் அட் டைப் பயன்பாடு முக்கியம் பெறுகின்றது. இதனால், திருடர்களுக்குப் பயந்து கடன் அட்டைப் பயன்பாட்டை நிறுத்த முடியாது.

இதேபோன்றுதான் இப்போது ஏ.ரீ.எம் காட்டுகளும் திருட்டுப்போகின்றன. ஏ.ரீ.எம் என்றால், தானியக்கக் கொடுப்பனவு இயந்திரமாகும். கீழ்வருமாறு ஒவ்வொரு வங்கிகளும் தமக்கெனத் தனியான அட்டைகளைக் கொண்டிருக்கும்.

மக்கள் வங்கி - Pet Card.
இலங்கை வங்கி - Cey Bank Cash point.
ஹற்றன் நஷனல் வங்கி - Cash Line Card.
வர்த்தக வங்கி - Cat Card.
சம்பத் வங்கி - Set Card.
செலான் வங்கி - Smart Card.
தேசிய சேமிப்பு வங்கி - Net Card.

இந்தக் கடன் அட்டைகளைத் திருடுபவர்கள் குறுக்கு வழியில் சென்று, வங்கி அல்லது நிதி அலுவலகத்தின் கணினி சேர்ப்பவரின் பிரதான கடவுச்சொல்லை (பாஸ் வேட்) கண்டுபிடித்து வருகின்றனர்.

இதன் பின்னர் இந்தவங்கிக் கணக்கு விபரங்களை எங்கோ ஒரு இடத்தில் இருந்துகொண்டு கண்காணிப்பதோடு, திருடவும் செய்கின்றனர். இதற்காக இவர்கள் வங்கி வாடிக்கையாளர்களின் ஏ.ரீ.எம் காட்டுக்களின் பாஸ்வேட்டையோ, கிரெடிட் காட்டுகளின் பாஸ்வேட்டையோ உடைக்கப்பட்ட பிரதான பாஸ் வேட்டினூடாக அறிந்துகொள்கின்றனர். இவர்களுக்கு இது கிடைத்துவிட்டால் வங்கிப் பெட்டகச் சாவியே கிடைத்து விட்ட தற்குச் சமன்.

இவர்கள் இதனூடாக ஒருவருடைய கணக்கிலுள்ள தொகையை அறிவதோடு ஏராளமான பணம் இருக்கும் கணக்கைத் தமது திருட்டுக்குப் பயன்படுத்துகின்றனர். இதற்காக ஒரு போலியான காட்டைத் தயார் செய்து கொள்கின்றனர். இது ஏ.ரீ.எம் மெசினில் பணத்தை திருடுவதற்கு சுலபமாக்குகிறது.

இவ்வாறான பல திருட்டுச் சம்ப வங்கள் வெளிவந்துள்ளன. இந்தியாவில் சென்னை நகரில் பிரபல வங்கி ஒன்றில் ஏ.ரீ.எம் சென்ரரில் நுழைந்த திருடன் பல காட்களைச் செலுத்தி பெருந்தொகைப் பணத்தை எடுத்தான். இதனை அவதானித்த பாதுகாப்பு உத்தியோகத்தர் பாதுகாப்புப் பிரிவுக்குத் தகவல் கொடுத்ததன் பேரில் திருடன் பிடிபட்டான். அவனது மின் அஞ்சலைத் திறந்து பார்த்தபோது, வங்கிக் கணக்கு எண்கள் அதற்கான இரகசிய எண்கள் என்பன கிடைக்கப் பெற்றன.

ஆனால், இத்தனை நடந்தும் வங்கிகளிருந்து உண்மைகள் வெளிவருவது குறைவாகவே உள்ளது. ஏனெனில், தங்கள் வங்கியில் நடந்த தவறுகள், வெளியே தெரியவந்தால் அது வங்கியின் பாதுகாப்பு நம்பகத்தன்மை என்பவற்றைக் இல்லாமல் செய்துவிடும் எனறு வங்கி அதிகாரிகள் அச்சப்படுவதே காரணமாகும். இது திருடர்களுக்குச் சாதகமாக அமைந்து விடுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர்கூட இலங்கையில் போலிக் கடன் அட்டை களைப் பயன்படுத்தி, கொழும்பில் உள்ள வர்த்தக நிலையங்களில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்த 15 வெளிநாட்டவர்களைக் கைது செய்யக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக ஏ.ரீ.எம் கிரெடிட் காட்டுக்களைப் பயன்படுத்தும் ஒருவர் அதை மறக்கக்கூடாது என்பதற்காக அதற்கான பாஸ்வேட்டாகப் பிறந்த திகதி, வயது, வீட்டு எண், குழந்தை மனைவி என்பவர்களின் பெயர்களைப் பயன்படுத்துகின்றார். இவற்றைப் பயன்படுத்துகின்றார். இவற்றைப் பயன்படுத்தும்போது, அவை திருடர்களுக்கு இலகுவாகின்றது.

எனவே, இப்படிப்பட்டவற்றைப் பயன்படுத்தாது, திருடர்கள் கண்டு பிடிக்கமுடியாத எண்களையும், எழுத்தையும் சேர்த்துப் பயன்படுத்துவதோடு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பாஸ் வேர்ட்டை மாற்றுவது சிறந்ததாகும்.

உலகளாவிய கிளைகளைக்கொண்ட இந்தியாவின் பிரபல வங்கி ஒன்று லண்டனிலுள்ள தனது வாடிக்கையாளருக்கு, சென்னையில் ஒன்றரை இலட்சம் ரூபாய்க்கு நகை கொள்வனவு செய்ததாக கூற்றுப் பத்திரம் அனுப்பியது. ஆனால், குறிப்பிட்ட தினத்தில் அந்த வாடிக்கையாளர் லண்டனில் இருந்திருக்கிறார். விசாரணைகளூடாக திருடன் சிக்கிக்கொண்டான்.

அண்மைக்காலமாகப் பல மோசடிச் சம்பவங்கள் இடம்பெற்றதோடு, இடம்பெற்றுக்கொண்டும் இருக்கின்றன. அவை பெருமளவில் வெளியில் வராமல் நிர்வாகிகள் தமது நிறுவன சுயபாதுகாப்புக் கருதி மறைக்கிறார்கள்.

இவற்றுக்கான தண்டனையாகக் கடுமையான சட்டங்கள் இலங்கை உட்பட சர்வதேச நாடுகள் மேற்கொள்கின்றபோதும், இதைத் தடுப்பது சிரமமாகவேயுள்ளது. இத்தகைய மோசடிகளில் லண்டன் நகர் முன்னணியில் இருக்கிறது.

ஒரு புள்ளி விபர அறிக்கைப்படி, 2003 ஆம் ஆண்டில் மட்டும் லண்டனில் சுமார் 400 மில்லியன் ஸ்ரேலிங்பவுண்ஸ் மோசடி இடம்பெற்றுள்ளது.

எனவே, தான் இத்தகைய மோசடிகளைத் தடுப்பதற்காக இப்பொழுது சர்வதேச விமான நிலையங்களில் புதிய முறை ஒன்று, பின்பற்றப்படுகிறது. கிரடிட்காட் உள்ளவர்களின் வெளிநாட்டு பயணத்தின்போது, அவர்களின் முழு விபரங்களும் - எங்கு செல்கிறார்கள் போன்ற தகவல்களை எல்லாம் சேகரித்து கிரடிட் காட் வங்கிகளுக்கு வழங்குகின்றது. இது ஓரளவுக்குக் குற்றச்செயல்களைக் குறைக்குமென நம்பலாம்.

இதனால்தான் இன்று கிரடிட் காட் கொடுப்பனவுகளும் இணையத் திருடர்களும் சைபர் வணிகத்தைப் பாதிக்குமா? என்ற வினா உலக வர்த்தகப் போக்கில் ஒரு சிந்தனையாக துளிர்க்கின்றது. ஆனால், இவை இதனைப் பாதிக்காது என்பதையே இன்றைய உலக வாணிபச் சந்தை எடுத்துக் காட்டுகிறது.

எந்த வொரு தொழிலுக்கும் அதற்கு எதிராக மோசடி நிகழ்வது வழமையானது. ஆனால், அதற்கான வழிகளைக் கண்டு பிடித்து தடுப்பதோடு, கடுமையான சட்டங்களைப் பின்பற்றுவதுமே இத்தகைய குற்றச் செயல்களைக் குறைக்க வழிவகுக்கும்.

**எஸ்.ஜெயா**

# நலிவடைந்தோர் பொருளாதார ரீதியாக மேம்பட உதவும் கூட்டுறவு

கூட்டுறவு என்பது கூட்டாகச் செயற்படுவது எனலாம். அதாவது பலர் ஒன்று சேர்ந்து பொதுவான ஒரு நோக்கத்துக்காக உழைத்தலே கூட்டுறவு எனக் கூறப்படுகின்றது. இதற்குப் பல வரைவிலக்கணங்கள் கூறப்பட்டபோதும், சியார் என்பவர் 'பொருளாதார ரீதியாக நலிவடைந்து காணப்படக்கூடிய குழுவொன்று தன்னலமின்றிப் பொருளாதாரச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளும் நிறுவனமே கூட்டுறவு இயக்கமாகும்' எனக் கூறுகிறார்.

வறியவர்களுக்கு மட்டும் வரையறுக்கப் பட்டதே கூட்டுறவு என்று விளங்கிக் கொள்வது தவறாகும். ஒவ்வொரு பொருளாதார நிலையில் உள்ளோரும் தமக்கு எனக் கூட்டுறவைக் கொண்டிருக்க முடியும். வறியவர்கள் நடுத்தர வகுப்பினர், செல்வந்தர் எனக் காணப்படும் பண வசதி அடிப்படையில் வேறுபட்ட செல்வந்த அளவுடன் பலர் காணப்படுவர். இவ்வாறு வேறுபட்ட செல்வந்தர் ஒரே மட்டத்தில் காணப்படுவோர் ஒன்றிணைந்து ஒரு கூட்டுறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

இவ்வாறான ஒரு கூட்டுறவு தோற்றம் பெறுவதற்கு ஏதுவான காரணம் என்ன என பார்ப்போம். 18 ஆம் நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சி காரணமாக பல சமூகப் பிரச்சினைகள் தோற்றம் பெறத் தொடங்கின, இதனுடன் புதிய செல்வந்தர்களும் உருவாகியதுடன், வருமான ஏற்றத் தாழ்வும் பெருமளவில் ஏற்பட்டதுடன் வேலையற்றோர் பிரச்சினையும் உருவெடுக்க ஆரம்பித்தது.

இந்தப் பிரச்சினைகள் உருவானபோது, றொபட் ஓவன் என்பவர் - சமூக சீர்திருத்தம் சம்பந்தமாகக் கருத்து வெளியிட்டார். அவர் சமத்துவம், செல்வம் ஆகியவற்றைக் கூட்டுறவு மூலம் சமமாகப் பகிர [illegible] இதனை இகனொமிஸ் [illegible] வாயிலாக வெளியிட்டார். அப்போது இவரது கருத்துக்கள் பல செல்வந்தரின் எதிர்ப்புக்களை எதிர்நோக்கியிருந்தாலும், ஏழைகளிடம் இவருக்கு மதிப்பு அதிகரித்துக் கொண்டே சென்றது.



இதன் தொடர்ச்சியாக 1844 ஆம் ஆண்டு றெக்டேல் கிராம நெசவாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கமொன்றை ஆரம்பித்தனர். இவர்களது முயற்சி வெற்றியைக் காணத் தொடங்கியதுடன் ஏனைய பகுதியினரும் இந்தமுறையின் கீழ் இணைய ஆரம்பித்தனர். இவ்வாறே கூட்டுறவு தோற்றம் பெறத் தொடங்கியது.

பொருளாதார ரீதியாக கூட்டுறவானது பலரின் நன்மைகளைக் கருத்திற்கொண்டே செயற்பட்டு வருகின்றது. இது - சங்க நலன் இன்றி, பிறர் நலன அடிப்படையிலேயே செயற்படுகின்றது. அதாவது [illegible] உற்பத்தியாளர்களிடமிருந்து குறைந்த விலைக்குப் பொருட்கள் வாங்கப்படுவதுடன், கூடிய விலைக்கே நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகிறது. கூட்டுறவு முறையின் மூலம் இடைத்தரகர்கள் கூடிய இலாபம் பெற்றுக் கொள்ளும் முறை அகற்றப்படுகிறது. உற்பத்தியாளருக்கு நியாயமான இலாபாம் கிடைப்பதுடன், நுகர்வோரும் அதிக செலவின்றி பொருட்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதனூடாக சமத்துவம் ஏற்பட வழி அமைகின்றது.

பொதுவான நோக்கத்துடன் செயற்படும் கூட்டுறவுத்துறையானது - அதனது தொடர் செயற்பாட்டுக்கும், அங்கத்தவர் நலனுக்கும், மற்றும் அன்றாட செலவுகளையும் ஈடுசெய்வதற்குக் குறிப்பிட்ட இலாபத்தைப் பெற்றுக் கொள்ளும். இந்த இலாபமானது - உற்பத்தியாளரையோ, நுகர்வோரையோ தாக்கமடையச் செய்யாது எனக் கூறப்படுகிறது.

பொது நோக்கம் கருதி கூட்டுறவு இயங்கினாலும், அது தனது பங்கு விற்பனை மூலமும் நிதியைத் திரட்டிக் கொள்கின்றது. இதற்குப் பதிலீடாக பங்காளருக்கு அவர்களுடைய பங்கிற்கேற்ப குறிப்பிட்ட வீத இலாபம் வழங்கப்படுகின்றது. இதன் படிபங்காளா நலன் மேம்படுவதுடன், அவர்களது பொருளாதார நிலையும் மேம்பட உதவுகின்றது.

இவ்வாறு பல தரப்பினரும் நன்மை பெறக்கூடிய கூட்டுறவுத் துறையானது, தற்போது மிகப் பெரிய பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளது என்றே கூறப்படுகின்றது. அதாவது சேவை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டுவந்து கூட்டுறவுத்துறையானது- தற்போது இலாபத்தை நோக்கமாகக் கொணடு செயற்பட்டு வரும் தனியார் துறையினருடன் போட்டி போடவேண்டி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கூட்டுறவுத் துறையானது மீள அமைக்கப்படுவதுடன், கூட்டுறவு அமைப்புக்களிடையே கூட்டுறவு முறையையும் ஏற்படுத்துவதனூடாக கூட்டுறவுத் துறையானது மீள உருவாக்கம் என்ற கருத்து வலுப்பெற்று, வருகின்றது.

**- வணிகன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலய நிதியத்தால் மாணவருக்கு அப்பியாசக்கொப்பி வழங்கும் நிகழ்வு

(மன்னார்)

மன்னார் தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ் மன்னார் புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள இலவச கணினிப் பயிற்சி நிலையத்தில் கல்விபயிலும் வறிய மாணவர்களுக்கு லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இந்து ஆலய அறக்கட்டளை நிதியத்தின் நிதியுதவியுடன் இலவச அப்பியாசக்கொப்பிகள் வழங்கப்படவுள்ளன.

இன்று நண்பகல் 12 மணிக்கு இந்த அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதியத்தின் மூத்த உறுப்பினர் பிரேமச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரசியற் துறைப்பொறுப்பாளர் எஸ்.இனியவன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் அமைப்பும் கலந்துகொள்ளவுள்ளது. தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு கடந்த செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில் ஆரம்பித்துள்ள இலவசக் கணினிப் பயிற்சி வழங்கும் சேவை, மன்னார் வறிய மாணவர்களுக்கு இந்தப் பயிற்சி நெறி ஒரு வரப்பிரசாதமாகும்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய பகுதிகளில் 15 கிராமிய தகவல் தொழில்நுட்ப நிலையங்களை தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு திறந்துவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வடக்குப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை

வவுனியா வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துவருகிறது.

கடந்த 1991 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு படை நடவடிக்கையின் போது, நெடுங்கேணியில் அமைந்துள்ள வவுனியா வடக்கு பிரதேச சபை முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. இதன்பின் இதுவரையில் இந்தப் பிரதேச சபையின் செயற்பாடுகள் பூரணமாக முன்னெடுக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

இதனால், இந்தப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது. இந்தப் பிரதேச சபை தற்போது நெடுங்கேணியில் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் இரண்டாம் கட்ட சமூகநலப் பயிற்சிநெறி!

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கிளிநொச்சி கல்வித்திணைக்களத்துடன் இணைந்து, சுகாதாரத் திணைக்களத்தினூடாக ஏ.எஸ்.பி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடத்தப்படும் சமூக நலப் பயிற்சி நெறியில் முதற்கட்டம் பாடசாலை ஆசிரியர்களுக்கு 2004 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் நடத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக 2 ஆம் கட்ட சமூக நலப்பயிற்சி நெறி பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு நடத்தும் அடிப்படையில், கடந்த 23, 24 ஆகிய இரு நாட்களில் கிளிநொச்சி வலயத்தில் கிளிநொச்சி சென்திரேசா மகளிர் கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சிநெறியில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

மேலும் இந்தப் பயிற்சிநெறியில் முதலுதவி, உடல் அமைப்பு தொழிற்பாடுகள், முதலுதவிச் செய்முறைகள், தொற்று நோய்கள், சுகாதார நடைமுறைகள் தொடர்பான பல விரிவுரைகள், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு ஆணையாளர், திட்ட இணைப்பாளர், தலைவர், தொண்டர்கள் ஆகியோராலும், சுகாதாரத் திணைக்களப் பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டன.

இந்தப் பயிற்சி நெறியில் முதலுதவி தொடர்பான கைநூல், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டு, பயிற்சியில் பங்குபற்றிய ஒவ்வொரு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சியை நிறைவுசெய்த ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் முதலுதவிப் பெட்டிகளும், அதற்கான மருந்துகள், உபகரணங்கள் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பரிவினால் இந்தத் திட்டத்தில் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் பயிற்சிநெறியை நிறைவுசெய்த மாணவர்களிடையே, பாடசாலை மட்டத்தில் முதலுதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டதோடு, பயிற்சியின் நிறைவில் பரீட்சையும், சான்றிதழ் சின்னங்கள் வழங்கும் ஒழுங்கும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரால் செய்யப்பட்டுள்ளன.

# மாற்றீடான வலுவிழந்தோருக்கு சங்கத்தால் சுழற்சிமுறையில் கடன்

கிளிநொச்சி பிரதேசத்தில் உள்ள மாற்றீடான வலுவிழந்தோர் சங்கம், மாற்றீடான வலுவிழந்தோருக்கு சுழற்சிமுறைக் கடனுதவிகளை வழங்கியுள்ளது. அண்மையில் நடைபெற்ற கொடிவாரத்தை முன்னிட்டு திரட்டப்பட்ட நிதியின் மூலமே இந்தக் கடனுதவி வழங்கப்பட்டது.

கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் 5 பேருக்கும், கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் 4 பேருக்கும், பூநகரி உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் 4 பேருக்கும் இந்தக் கடனுதவிகள் வழங்கப்பட்டன.

விவசாயம், கடற்தொழில், கோழி வளர்ப்பு, சிறுவியாபாரம் போன்றவற்றுக்கான இந்த சுழற்சி முறைக்கடன் உதவிகள் வழங்கப்பட்டன. இந்த சுழற்சிமுறைக் கடனுக்காக 1 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# உருத்திரபுரம் வைத்தியசாலைக்கு புதிய மின்பிறப்பாக்கி அன்பளிப்பு!

கிளிநொச்சி - உருத்திர ரம் வைததியசாலைக்கு 'எம்டா' நிறுவனம் மின்பிறப்பாக்கி (ஜெனரேட்டர்) ஒன்றை வழங்கியுள்ளது.

இநத வைத்தியசாலைக்கு எம்டா நிறுவனப் பணிப்பாளர் அஜூக்கா தொமிக்டா, வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி கோபாலபிள்ளையிடம் இநத ஜெனரேட்டரைக் கையளிததார். இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பு.சத்திய மூர்த்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



வன்னிப் பதிவுகள்

### தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு இன்று

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட தேசிய எழுச்சிப் பேரவைகளின் சங்கம நிகழ்வு, இன்று காலை 10 மணிக்கு புதுக்குடியிருப்பு அரச சார்பற்ற இணையத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் இலக்கியன் தெரிவித்தார்.

### பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் இன்று நடாத்தப்படவிருந்த கல்விப் பொதுத் தராதர சாதாரணதர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை நாளை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி 10 மணிவரை விஞ்ஞானம் பகுதி I பாடமும், காலை 10.30 மணிதொடக்கம் விஞ்ஞானம் பகுதி II பாடமும் நடைபெறுமென கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் அறிவித்துள்ளனர்.

### நூலக கட்டடப்பணி இடைநிறுத்தம்

கிளிநொச்சி - ஸ்கந்தபுரத்தில் அமைக்கப்பட்டுவந்த நூலகத்துக்கான கட்டடப்பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த நூலகக் கட்டடப் பணி, கரைச்சி பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டு தற்போது நிதி நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

### நூலகவாரம் அனுஷ்டிப்பு

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில், அண்மையில் நூலக வாரம் அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன் இந்த [illegible] [illegible] வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

# வவுனியா வடக்கு — கல்விவலயப் பாடசாலைகள் அனைத்தையும் புனரமைப்புச் செய்வதற்கு 700 மில்லியன் தேவை


(வவுனியா)

வவுனியா வடக்கு கல்விவலயம் கடந்தகால போரினால் பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ளதென, வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார். வவுனியா வடக்கு வலயப் பாடசாலைகளில் கல்வி நிலைமைகள் தொடர்பாக கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இந்த வலயத்தில் 84 பாடசாலைகள் காணப்படுகின்றன. இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு படை நடவடிக்கையின்போது, எமது வலயத்திலுள்ள 82 பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டன. இரண்டு பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயத்தில் காணப்படுகின்றன. அதனால் இந்த இரண்டு பாடசாலைகளும் சேதமடையாத நிலையில் உள்ளன. இந்தப் பாடசாலைகளை முழுமையாக அமைப்பதற்கு 700 மில்லியன் ரூபா வரையான நிதி தேவைப்படுகிறது.

இந்தநிலையில் அரசால் எமது வலயப்பாடசாலைகளை புனரமைப்பதற்கு நிறைவான நிதியை வழங்காத நிலை காணப்படுகிறது. எமது கல்விவலயத்தைப் பொறுத்தவரை ஆசிரியர் பற்றாக்குறை பெரும் நெருக்கடியாக உள்ளது.

தற்போது பணியில் உள்ள ஆசிரியர்களின் சேவை அர்ப்பணிப்பு மிக்கதாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி தமிழீழ காவல்துறையினரால் நடாத்தப்பட்ட வீதி விழிப்புணர்வுக் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி நிகழ்வில் காட்சிக்கு வைக்கப்பட்ட படங்களுக்கான விளக்கத்தினை தமிழீழ காவல்துறையினர் விளங்கப்படுத்துவதைப் படத்தில் காணலாம்.

# வவுனியா இராசேந்திரம்குளம் பகுதியில் சமகால அரசியல் கருத்தரங்கு

(வவுனியா)

வவுனியா - இராசேந்திரம் குளப் பகுதியில் சமகால அரசியல் தொடர்பான கருத்தரங்குகள் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு தேசிய எழுச்சிப் பேரவையின் துணைச் செயலாளர் தவலஷ்மி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்புரையை வவுனியா மாவட்ட அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் தர்மேந்திரா நிகழ்த்தினார்.

வவுனியா வர்த்தகர்களுக்கான சமகாலக் கருத்தரங்கு, வவுனியா மாவட்ட அரசியற்துறையினரின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

# அக்கராயன் மக்களுக்கான மேட்டுக்காணி 15 வருடங்களாக வழங்கப்படவில்லை

கிளிநொச்சி - அக்கராயன் பகுதி மக்களுக்கான மேட்டுக்காணி, கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக வழங்கப்படவில்லை.

இதன்காரணமாக இந்தப் பகுதி மக்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட வயற்காணிகளிலேயே வீடுகளை அமைத்து வாழ்ந்துவருகின்றனர். தற்போது பெய்துவரும் பருவ மழை காரணமாக வீடுகள் ஈரமடைந்து, இடிந்துவிழும் நிலை காணபபடுகிறது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மணியங்குளம் பகுதி மக்களுக்கு வீடுகளை அமைததுக்கொடுக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

# கிளிநொச்சி விவசாய திணைக்களத்தால் ஞானிமட விவசாயிகளுக்கான பயிற்சிநெறி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைககளத்தால் - ஞானிமடம் கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கான விவசாயப் பயிற்சிநெறி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்தப் பயிற்சிநெறி ஞானிமடம் விவசாய அமைப்புக்களின் தலைவர் இரா. செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி நெறியில் பூநகரி விவசாயப் போதனாசிரியர் சத்தியவதி நடராசா, கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தின் பாடவிதான உத்தியோகததர் எஸ். செல்வராசா, பு,நகரி பிரதேச கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அமுதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்தப் பயிற்சி நெறியில் காலபோக நெற்செய்கை, இயற்கைப் பசளை தயாரித்தல் சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதில் ஞானிமட கிராமத்தைச் சேர்ந்த 42 பயனாளிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

### வீதிக் குறியீடு இல்லை

மன்னார் - பள்ளமடு மருத்துவமனைக்கு முன்பாக வீதிக் குறியீடுகள் இல்லாத நிலை காணப்படுகிறது.

இதன் காரணமாக வாகனச் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதுடன், இந்த வைத்திய சாலை முன்பாக விபத்துக்கள் ஏற்படும் அபாயநிலையும் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நன்றுஆற்றல் உள்ளும் தவறுண்டு அவரவர்*
*பண்புஅறிந்து ஆற்றாக் கடை.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## ஜனாதிபதி குறித்த ஜே.வி.பியின் மதிப்பீடு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சர்வ வல்லமைமிக்க ஜனாதிபதி எனத் தன்னைப் பிரகடனம் செய்துகொண்டு ஆட்சிப் பீடத்தில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்திவரும் ஜனாதிபதியின் பெறுமதி இவ்வளவு தானா என்று பரிதாபப்படும் அளவுக்கு அவரது பங்காளிக் கட்சியின் பிரமுகரும் ஜே.வி.பியின் பிரசாரப் பீரங்கியுமான விமல் வீரவன்ஸ பொதுக் கூட்டமொன்றில் ஆற்றிய உரையொன்றின் மூலம் ஒரு நிலையை உருவாக்கியுள்ளார் என்றே கூறவேண்டும்.

ஓய்வு பெற்றுச் சென்ற பொலிஸாரைப் போன்று (ஒரு பொலிஸ் அதிகாரி கூட இல்லை....!) இருந்த ஜனாதிபதிக்கு உத்வேகத்தை ஏற்படுத்தியவர்கள் தாமே என்றும், அச்சத்தில் நிம்மதியின்றி – தூக்கமின்றி அல்லாடிக்கொண்டிருந்த அவரை சர்வவல்லமை பொருந்த ஒரு ஜனாதிபதியாக்கி இன்றுள்ள உயர்நிலைக்கு உயர்த்தியவர்களும் தாம்தான் என்றும் விமல் வீரவன்ச தன் உரையில் வெளிப்படையாகக் கூறியுள்ளமையானது ஜனாதிபதியை அவமதிப்பதாக மட்டுமல்ல கோமாளித்தனமானதாகவும் உள்ளதென்றும் கூற வேண்டும்.

உண்மையில் கடந்த பொதுத்தேர்தலின் முன்னர் வெறுமனே பத்தேபத்து உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் கொண்டிருந்த ஜே.வி.பியினரை – தனது அரசியல் சுய நலன்களுக்காகவும், சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்களைக் குழப்புவதற்காகவும் வேறும் சில அற்பத்தனமான – தேசிய நலனுக்கு முரணான தனிப்பட்ட அபிலாஷைகளுக்காகவும் தன்னுடன் கூட்டுச் சேர்த்துக்கொண்ட வரலாற்றுத் தவறின் விளைவே விமல் வீரவன்சவின் இந்த உரையாகும்.

இதனை ஜனாதிபதி இப்போது நன்கு புரிந்துகொண்டிருப்பார் என்றே கூறவேண்டும். இதற்கு அவர் என்ன பதிலை அல்லது விளக்கத்தைக் கொடுக்கப்போகிறார் என்பதே பலரதும் எதிர்பார்ப்பாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற ஜனாதிபதியின் தலைமையிலான முன்னைய கூட்டணிக் கட்சிக்குள் மிக நெடுங்காலமாகவே இணைந்திருந்த பல கட்சிகள் – குறிப்பாக லங்கா சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஜக்கிய முன்னணி போன்றவைகள் – கடந்த தேர்தலின் போது பொ.ஐ.முன்னணியின் கொள்கைகளுடன் எந்தக் காலத்திலும் உடன்பாடான கொள்கைகளைக் கொண்டிராத ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர ஜனாதிபதி முடிவெடுத்தபோது அதனைக் கடுமையாக எதிர்த்தனர். ஆனாலும் ஜனாதிபதியின் முடிவு அவர்களின் எதிர்ப்பையும் ஆலோசனைகளையும் புறந்தள்ளவே செய்தது.

ஒரு காலத்தில் தனது கணவனும் பிரபல சிங்கள நடிகரும், சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவருமான விஜயகுமாரணதுங்கவைப் படுகொலை செய்த ஈவிரக்கமற்ற கொலைகாரர்கள் என விரல் சுட்டித் தானே குற்றம் சுமத்திய ஜே.வி.பியினருடன் கடந்த தேர்தலின்போது கூட்டுச்சேர பிடிவாதமாக முடிவெடுத்தபோது அவரது கணவரின் ஆத்மாவே அவரை மன்னித்திருக்காது.

அந்தக் கூட்டு – தேர்தலை முன்னிட்டு ஏற்படுத்திக் கொண்ட ஒன்று என்றாலும்கூட, ஜனாதிபதியின் அப்போதைய அரசியல் தேவைகளை குறிவைத்து உருவாக்கப்பட்டது என்றாலும் கூட, அதன் எதிர்கால விளைவுகள் எப்படி இருக்கும் என்பதைத் தொலைநோக்குச் சிந்தனையுடன் ஆராய ஜனாதிபதி தவறிவிட்டதன் விளைவுகளை இப்போது அனுபவிக்கத் தொடங்கிவிட்டார்.

ஜனாதிபதியுடன் ஜே.வி.பி கூட்டுச்சேர ஆரம்பத்தில் விதித்த நிபந்தனைகளின் உள்நோக்கத்தை அவர் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்.

இப்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஜனாதிபதியின் தம்பியான அநுராவை வைத்தே சிதைத்துவிட்ட ஜே.வி.பியினர் – தங்களின் மக்கள் இயக்கங்கள் காரணமாகவே ஐம்பது சதவீத மக்களின் ஆதரவை இந்த அரசு பெற்றதென்று தம்பட்டமடிப்பதுடன், மீதமான ஐம்பது வீதமானவர்களும் தம்முடன் வந்து இணைந்து கொள்வார்கள் என்றும் கூறுவதானது ஜனாதிபதியையும் அவரது கட்சியினரையும் விரைவில் முற்றிலும் ஓரம்கட்டிவிடுவோம் என்று பிரகடனம் செய்வது போல்லாவா. உள்ளது!

கூடாரத்தினுள் குளிருக்கு தலையை நீட்ட பரிதாபப்பட்டு அனுமதி வழங்கிய பாலைவனப் பயணியின் நிலை போன்று ஜனாதிபதியின் நிலையும் மாறிவிட்டது.

எல்லாவற்றிலும்விட ஜனாதிபதி ஐம்பது சதம்கூட மதிப்பில்லாமல் இருந்த ஒருவர் எனவும் அவர் சர்வவல்லமை மிக்கவராக மாறியது தாங்கள் கொடுத்த ஆதரவும் பிச்சையாலும்தான் என்றும் வீரவன்ச தம்பட்டம் அடித்திருப்பது தான் ஜனாதிபதியை மிகவும் மோசமாக அவமானப்படுத்தும் விடயமாகும்.

கூடாத கூட்டங்களைக் கூட்டிக்கொண்டால் தேடாத அவமானங்களையெல்லாம் தேடிக்கொள்ள வேண்டிவரும் என்பதை ஜனாதிபதி இப்போதாவது புரிந்துகொள்வது நல்லது.

அமைதிப்பேச்சுக்களை குழப்ப சமாதான எதிர்பாளர்களுடன் கூட்டுச் சேர்ந்த ஜனாதிபதி இப்போது அவர்களால் தன் சொந்த அமைதியை இழக்கத் தொடங்கிவிட்டார்.

வினை விதைப்பவர் தினையையா அறுவடை செய்ய முடியும்?

# நாடும் நடப்பும்



# முப்படை அதிகாரிகளையும் கொண்ட “கிரமோபாய திட்டக்குழு” நியமனம்

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் பொருட்டும், எதிர்வரும் காலங்களில் யுத்த அபாயம் ஏற்பட்டால் முப்படைகளும் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றியதான வழிமுறைகளைக் கண்டறிவதற்காக கூட்டுப்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியின் ஆலோசனைக்கு அமைய முப்படை அதிகாரிகளையும் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

“கிரமோபாய திட்டக்குழு” எனப் பெயரிடப்பட்ட இந்தக் குழுவின் தலைவராக கடற்படையின் நடவடிக்கைப் பணிப்பாளர் நாயகம றியர் அட்மிரல் சரத் வீரசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய அங்கத்தவர்களாக ஒருங்கிணைந்த நடவடிக்கைத் தலைமையகத்தின் நடவடிக்கைப் பணிப்பாளர் பிரிகேடியர் பராக்கிரம பன்னிப்பிட்டிய, கொமடோர் திஸ்ஸ அமரசிங்க, பிரிகேடியர் ஏ.சந்திரசிறி, இராணுவ நடவடிக்கைப் பணிப்பாளர் பிரிகேடியர் சிறிஷாந்த சில்வா, விமானப்படை நடவடிக்கைப் பணிப்பாளர் ஏயர் கொமடோ றொஷான் குணதிலக ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவினர் கடந்த வாரம் வடக்கு- கிழக்குப் பிரதேசங்களுக்குச் சென்று தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் நாட்டில் யுத்தமொன்று வெடித்தால் அதனை எவ்வாறு எதிர்கொள்வது அதனை எவ்வாறு முறியடிப்பது போன்றவற்றுக்கான வேலைத் திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (தே)

# அரியாலையில் ஒரே இரவில் ஆறு கோயில்களில் திருட்டு

அரியாலைப் பகுதியில் ஒரே இரவில் 6 கோயில்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அரியாலை கலைமகள் வீதியில் உள்ள இரு கோயில்களிலும், அரியாலை மேற்கு கூரியாவளவு வைரவர் கோயில், அரியாலை மேற்கு ஆசிர்வாதப்பர் வீதியில் உள்ள பேச்சியம்மன் கோயில், அரியாலை இலந்தைக் குளம் வீதியில் உள்ள நாச்சியம்மன் கோயில் ஆகிய கோயில்களின் உண்டியல்களை உடைத்த திருடர்கள் அவற்றுள் இருந்த பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

அரியாலை ஸ்ரீ அண்ணமார் ஆலயத்திலும் திருட்டு முயற்சி நடைபெற்றுள்ளது.

இதேவேளை, அரியாலை இலந்தைக்குளம் வீதியில் உள்ள நாச்சிமார் கோயிலில் மோட்டார் சயிக்கிளில் வந்த திருடர்கள், கோயிலின் பின்புறமாக உள்ள பூங்கா- பக்கமாக உட்புகுந்து அங்குள்ள உண்டியலை உடைக்க முற்பட்ட வேளை கோயிலின் முன்புறமாக உள்ள காவலாளி விழிப்படைந்து, கோயில் மணியை அடிக்கவே திருடர்கள் முயற்சி கைகூடாமற் தப்பிச் சென்றுள்ளனர். அத்துடன் இவர்கள் தாம் கொண்டு வந்த தலைக் கவசத்தையும் விட்டுச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை அரியாலைப் பகுதியில் தெருவிளக்குகள் இல்லாததால், இருளைப் பயன்படுத்தி திருடர்களின் திருட்டு முயற்சி ஏற்படும் அபாயம் இருப்பதாக நேற்றைய ஈழநாட்டில் செய்தி ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# எந்தவொரு அமைச்சு பதவியையும் கோரவில்லை

—தொண்டமான் கூறுகிறார்—

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தற்பொழுது பெற்றுக் கொண்டுள்ள அமைச்சர் பதவிகளுக்கு மேலதிகமாக, எந்தவொரு அமைச்சுப் பதவியையும் கோரவில்லை என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களது சம்பள உயர்வு தொடர்பாக கொள்ளுப்பிட்டி சௌமிய பவனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஊடகவியலாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தான் ஜனாதிபதியைச் சந்தித்து அமைச்சர் பதவியைக் கேட்பதற்காக அல்ல என்று அவர் கூறினார்.

தனக்கு அமைச்சுப் பதவி வழங்கப்போவதாக பத்திரிகைகளில் வெளியான செய்திகள் மூலமாகவே அறிந்து கொண்டதாகவும் கூறிய அவர், தான் இதுவரை எந்த அமைச்சுப் பதவியையும் கோரவில்லை எனவும் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து எனக்கு அமைச்சர் பதவியை வழங்கச் செய்வார்களேயானால் அதனை மகிழ்ச்சியுடன் பொறுப்பேற்பேன் எனவும் அவர் கூறினார். (தே)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நனைந்த நிலையில் பஸ் பிரயாணம்!

பருத்தித்துறையில் இருந்து கனகம்புளியடி ஊடாக சாவகச்சேரியினை வந்தடையும் வடபிராந்திய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியின் மேற்பகுதி - அதாவது கூரை மற்றும் பக்கக் கண்ணாடிகள் என்பவற்றின் ஊடாக மழை நீர் சிந்துவதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதில் பயணம் செய்யும் பயணிகள் மழை நேரங்களில் இறங்கும்போது நனைந்து தோய்ந்தே காணப்படுகின்றனர்.

சிலர் பஸ்ஸினுள் குடைபிடித்தவண்ணம் பயணம் செய்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. (29)

# சூசையின் பயணத்துக்கு உதவியது இராஜதுரோகச் செயல்!

## அத்துரலிய ரத்தின தேரர்

இந்த நாட்டில் செயற்பட்டு வரும் கொடிய பயங்கரவாதிகளில் ஒருவரான கடற்புலிகளின் தளபதி சூசைக்கு வைத்திய சிகிச்சைக்கெனக் கூறி, சிங்கப்பூருக்குச் சென்றுவர அரசாங்கம் விசேட வசதிகளை வழங்கியது. பாரதூரமான இராஜதுரோகச் செயல் என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் அத்துரலிய ரத்தின தேரர் குறிப்பிட்டார்.

கடற்புலிகளின் தளபதி சூசை வன்னியிலிருந்து விமானப் படையினர் உலங்குவானூர்தி மூலம் கொழும்புக்கு வருவதற்கும், சிங்கப்பூரிலிருந்து கொழும்பு வந்த பின்னர், அங்கிருந்து வன்னிக்குச் செல்வதற்கும் அரசாங்கம் அனைத்து வசதிகளையும் வழங்கியதன் மூலம் அவர்களது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஊக்கம் கொடுப்பதாகவே அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வைத்தியசிகிச்சை பெற்றுச் கொள்வதற்கெனக் கூறிக் கொண்டு, சூசை சிங்கப்பூருக்குச் சென்று அங்கு எதுவித சிகிச்சையும் பெறாது மீண்டும் கொழும்புக்கு வந்தது குறித்து சந்தேகப்பட வேண்டியுள்ளது.

அடுத்து இடம்பெறவுள்ள நாடாளுமன்ற அமர்வின் போது, இதைப்பற்றி அரசிடம் கோருவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

**கல்வியியல்** **ஆர்.கே.மேனன்**



# ஆசிரியரின் சுமுகமற்ற உறவு மாணவர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தும்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

மற்றவர் அந்தக் கருத்தைப் பற்றி என்ன நினைப்பார்கள்? என்ற தாழ்வுப்போக்குக் கொண்டு ஒதுங்குகிற சுபாவம். தான் எதிர்பார்ப்பது எல்லாம் நிறைவேற வேண்டும் என்ற ஒரு நியாயமற்ற ஆசைகள். எல்லாப் பெண்களுமே தன்னை ரசிக்க வேண்டும் என்ற சில பாலியல் உணர்வுகள், எதிர்ப்பாலார்கள் எல்லோரும் என்னை விரும்புகின்றனர் என்று பறைசாற்றுவதன் ஊடாக- தன்னை மேல் நிலைப்படுத்துகிற, விருத்தியடையாத ஆளுமைப் பாங்கு, தன்னைப் பற்றி பிழை கூறுபவரிடத்திலுள்ள பிழையைக் கண்டு பிடிக்கிற ஒரு தன்மை, இப்படியான பல விருத்தியடையாத ஆளுமைப் பாங்குகளோடு தான் மாணவர்கள் வகுப்பறைக்குள் பிரவேசிக்கின்றனர் என்பதை ஒவ்வொரு ஆசிரியர்களும் ஆழமாகப் புரிந்து கொள்ளவேணடும்.

மாணவர்களின் தன்மைகள், பலம, பலவீனங்களை ஒவ்வொரு ஆசிரியர்களும் தெரிந்து கொள்ளவேண்டும். இதைத் தெரியாது இருப்பதே ஆசிரியர், மாணவர்களுக்கு இடையிலான முரண்பாடுகளுக்கு முக்கிய காரணமாக அமைகிறது.

ஒருவரது எதிர்பார்ப்புக்கள், ஆசைகள் சரியானதாக இருக்கலாம் அல்லது பிழையானதாக இருக்கலாம். எதுவாயினும் அது தவறு அல்ல. ஏனெனில், அதுவே வளர்ச்சியடையாத ஆளுமைப் பருவம். ஆனால், இதை ஆசிரியர்கள் உணராது - தவறான ஆசைகள், எதிர்பார்ப்புக்களை உடனடியாக மாணவர்கள் மத்தியில் முறியடிக்க வேண்டும் என்று முற்படுகிறபோதுதான் - முரண்பாடுகளும், பிரச்சினைகளும் இருவருக்குமிடையில் தோன்றுகிறது.

கால அவகாசம் விட்டு அந்தத் தவறான எதிர்பார்ப்புக்கள், ஆசைகளை அவர்களிடத்திலிருந்து நிராகரிக்கிறபோது, அது நிச்சயம் வெற்றியளிக்கும். முரண்பாட்டைத் தோற்றுவிக்காது.

இதைவிட, ஒவ்வொரு மாணவர்களுக்கும் வெளிப்படையான சில ஆளுமைப் பண்புகளும் உண்டு. தனிப்பட்ட சில ஆளுமைப் பண்புகளும் உண்டு. இந்த இரண்டும் தவறானதாக இருக்கலாம், அல்லது சரியானதாக இருக்கலாம். சரியான ஆளுமைப் பாங்கு எனில், அதில் மாற்றம் ஏற்படுத்த வேண்டிய அவசியமிலலை.

ஆனால், பிழையான சில அம்சங்களும் உண்டு. இந்தப் பிழையான அம்சங்கள் வெளிப்படையான ஆளுமைப் பாங்கில் இருப்பின், அதில் காலம் தாமதித்து மாற்றத்தை ஏற்படுத்த முனையலாம்.

ஆனால் எந்த ஒரு ஆசிரியரும், மாணவர்களது தனிப்பட்ட ஆளுமைப் பாங்கில் கைபோட முற்படக்கூடாது. இதை எப்படி இனம் காண்பது என்று கேட்கிறீர்களா? ஆம்... புரிகிறது.

வெளிப்படையான ஆளுமைப் பாங்கின் செயற்பாடுகளை மிகவும் அவதானமாகப் பார்த்தால், இடையிடையே மாத்திரம் தான் அவர்களது செயற்பாடுகளில் இது வந்து போகும். ஆனால், தனிப்பட்ட ஆளுமைப் பாங்கு - நித்தமும் அவாகளது செயற்பாடுகளில் வந்துபோவதைக் காணலாம்.

இவ்வாறு மாணவர்களது ஆளுமைப் பாங்கை மிகவும் அவதானித்து, அதற்கேற்ப விட்டுக்கொடுத்து செயற்படுவதன் ஊடாக முரண்பாடுகள் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். அலலது இலகுவாக தீர்த்துக்கொள்ளலாம்.

**ஆசிரியர்களது ஆளுமைப்பாங்கு**

இந்த ஆளுமைப்பாங்கை எடுதது நோக்குவோமானால், இவர்களிடத்திலும் பலமான, பலவீனமான ஆளுமைப் பாங்குகள் இருப்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளவேண்டும். ஏனெனில், நாமும் மனிதர்கள் தானே! ஆனால், மாணவர்களது வாழ்க்கையில் பங்கெடுக்கிற ஆசிரியர்களாகிய நாங்கள் - எங்களிடம் உள்ள பலவீனப்பட்ட ஆளுமைகளைத் தெரிநது, அதிலிருந்து திருந்திக் கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களது பலவீனப்பட்ட ஆளுமைகளும் - மாணவர், ஆசிரியர்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கலாம்.

உதாரணமாக ஆசிரியர்கள் மத்தியில் எல்லா மாணவர்களும் எம்மை மதிக்கவேண்டும், எங்களது விருப்பு, வெறுப்புகளுக்கு ஊடாகத்தான் அவர்களது செயற்பாடு இருக்கவேண்டும். நாம் சொல்கிற கருத்து சரியானதாக இருந்தாலும், பிழையானதாக இருந்தாலும் சரி அதைத்தான் மாணவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு மாணவனது நடத்தை பிழையானதாக இருந்தால், அந்த நடத்தையிலிருந்து உடனடியாகத் திருந்த வேண்டிய தண்டனைகளை வழங்க வேண்டும் என்கிற நினைப்பு - மற்றைய ஆசிரியர்கள், அதிபர்களது உறவுகளுக்கு மாணவர்கள் இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்கிற நினைப்பு - மாணவர்களது பருவ வயது உணர்வுகளைப் புரிந்து கொளளாது, அவனது எதிர்பார்ப்புகள் ஆசைகளை உணர்ந்துகொள்ளாது, அவனது மனநிலைகளை முறியடிக்கற சில எதிர்க்கோஷங்களைக் கிளப்புதல், எதிர்ப்பாலார் முன்னிலையிலும் - மற்றைய ஆசிரியர்கள் முனனிலையிலும் தனது நிலையை உயர்த்துவதற்காக மாணவர் தனித்துவத்தைப் பாதிக்கும் அளவில் ஏசுதல், இப்படியான ஒருசில திருத்தப்படவேண்டிய ஆளுமைகளோடும் ஆசிரியர்கள் இருக்கின்றனர்.

இது தவறு - இதனாலும் ஆசிரியர், மாணவர்களுக்கு இடையிலும் முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்புண்டு. எந்தவொரு ஆசிரியரும் - மாணவன் தன்னோடு எதிர்க்கிறான். மாணவன் தன்னை மதிக்கிறானில்லை என்பதற்காகத் தனது தனித்துவம் குறைநதுவிடும் என்றுதான் சிந்திக்கின்றனர்.

உண்மையிலேயே தனித்துவம் என்பது அவ்வாறு தீர்மானிப்பதில்லை. தனித்துவங்கள் மதிப்புக்கள் எனபது ஒவ்வொரு ஆசிரியர்களது செயற்பாடுகள், அர்ப்பணிப்புக்கள், தியாகங்களுக்கு ஊடாக உருவாகுவது.

ஒரு மாணவன் மதிக்காது எதிர்க்கிறான் என்றால், அவனது ஆளுமைப் பாங்கில் இருக்கிற குறைபாடு என்பதை உணர்ந்து அவனுக்கு ஏற்ற விதத்தில் செயற்பட்டு, அந்த ஆளுமைப் பாங்கை மாற்ற முற்படுவதே ஆசிரியர்களது கடமையாகும்.

இதற்காக ஆசிரியர்களாகிய எமது சுயமதிபபுக்காக ஒரு மாணவனோடு முரண்படுகிறோம் என்றால், அது எமது தவறு என்றுதான் கூற வேண்டும்.

ஒரு சிறு பிள்ளையை நாம் தூக்குகிறபோது, எமது தலைமயிரைப் பிடித்து அடிக்கிறது எண்பதால் எமது மதிப்புக் குறைந்து விட்டதே என்று சிந்திக்கலாமா? பாவம் அது தெரியாத பருவம் என்றல்லவா மன்னித்து விடுகிறோம். அவ்வாறு தான் விருத்தியடையாத ஆளுமை என்று அவனை மன்னித்து, திருத்திக் கொள்ளவேண்டும்.

ஆசிரியர்களாகிய நாம் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். சுய மதிப்புக்களை சம்பாதிப்பதற்காகவோ, சுய கௌரவங்களைச் சம்பாதிப்பதற்காகவோ இந்தத் தொழில் எமக்குக் கிடைக்கவில்லை. எம்மைத் தியாகம் செய்து மாணவர்களை வளர்க்கவே இந்தத் தொழில் எமக்குக் கிடைத்தது.

இவ்வாறு ஒவ்வொரு மாணவர்களையும் புரிந்து, அவனது தனித்துவங்களுக்கு ஊடாக செயற்படுகிற போது, நிச்சயமாக மாணவர், ஆசிரியர்களது முரண்பாடுகள், பிரச்சினைகளிலிருந்து தப்பித்துச் சுமுகமான உறவு நிலைக்கு வித்திட்டுச் செல்லலாம்.

இதனால் வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடு நிச்சயம் வெற்றியளிக்கும். கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்காக மாத்திரம் எமக்கு இந்த ஆசிரியத் தொழில் வழங்கப்படவில்லை. கற்கிற அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழகம் போக முடியாது. நல்ல பிரஜை[illegible]களாக மாணவர்களை மாற்றி, சிறந்த ஆளுமைப் பாங்கோடு அவர்களை வெளியேற்றுவதே எமது கடமை.

ஆளுமைகளைத் திருத்துகிற போது - இந்த முரண்பாடுகளையும், பிரச்சினைகளையும் தீர்க்காது, தொடர்ந்து வகுப்பறைகளில் நீடிக்க விட்டால் எமது ஆசிரியத் தொழிலின் அர்த்தம் என்ன. ◆

**நேர்காணல்** **பட்டனைந்து**

# கலைவடிவங்களின் அழிவுக்கு தொலைக்காட்சிகளே காரணம்





அண்ணாவியார் முத்தையா துரைசிங்கம் 50 ஆண்டுகளுக்கு முற்பட்ட கலைஞர். அவருக்கு வயது 82. இப்பொழுதும் கலை ஆர்வம் மிகுந்தவராகத் திகழ்கிறார். அவரது அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

**நீங்கள் நாடகத்துறைக்கு எவ்விதம் அறிமுகமானீர்கள்?**

அந்தக் காலத்தில் நாட்டுக்கூத்துகளைப் பார்த்து ரசித்து வந்ததன் பயனாக, நடிக்கவும் ஆசை கொண்டேன். அண்ணாவியார் பரியாரி நீக்கிலஸ் என்பவரிடம் இது பற்றிக் கேட்டேன். அவர் 'ஜெயசீலன்' நாட்டுக்கூத்துக் கொப்பியை வழங்கினார். அதனை அண்ணாவியார் நட்டுவர் அந்தோனிப்பிள்ளை மூலமாகப் பழகி, மேடை ஏறினேன். முதல் நாடகத்திலேயே ராசகுமாரன் பாத்திரத்தில் நடித்தேன்.

**உங்களை நாடகத்துறைக்குக் கொண்டு வந்தவர்களாக யாரைக் கூறுவீர்கள்?**

பரியாரி நீக்கிலஸ், நட்டுவர் அந்தோனிப்பிள்ளை, மிருதங்க வித்துவான் பாக்கியநாதன், சவிரிமுத்து மனவல் ஆகியோரைச் சொல்லலாம்.

**இதுவரை எத்தனை நாடகங்களில் நடித்திருக்கிறீர்கள்?**

முதலாவதாக 'ஜெயசீலன்'. அடுத்து 'ஞானசீலன்' ஆகிய நாட்டுக்கூத்துக்களில் முக்கிய பாத்திரமான அரசகுமாரனாகவும், மூன்றாவதாக 'சுழியார்' நாட்டுக்கூத்தில் மந்திரிகுமாரனாகவும் நடித்துள்ளேன்.

**உங்களுக்குப் புகழ்தந்த நாடகங்களாக எதனைச் சொல்வீர்கள்?**

நான் நடித்தவற்றுள் 'ஞானசீலன்' நாட்டுக்கூத்தையும், பழக்கி மேடையேற்றியவற்றுள் 'யூதகுமாரன்' நாட்டுக்கூத்தையும் சொல்லலாம்.

**நீங்கள் இந்தப் பணியில் சாதித்துள்ளதாக எதைக் கருதுகிறீர்கள்?**

ஒரு முழு இரவும் பாடி நடிக்கும் 'யூதகுமாரன்' நாட்டுக் கூத்தை - மூன்று மணித்தியா லங்களுக்குக் குறுக்கிப் பழக்கி மேடையேற்றியிருக்கிறேன்.

அதற்காக குருநகர் முன் னேற்ற ஐக்கிய முன்னணியால் 'அண்ணாவி' பட்டம் வழுஙகப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தர்மப்பிரகாசம் நாட்டுக்கூத்தையும் - 3 மணித்தியாலங்களுக்குள் சுருக்கி வழங்கி இருக்கிறேன். அத்துடன், 'உத்தரியத்தின் மகிமை' என்னுமோர் புதிய நாட்டுக் கூத்தையும் இயற்றி வழங்கி இருக்கிறேன்.

**நீங்கள் நெறிப்படுத்திய நாடகங்கள் எவையெவை?**

'யூதகுமாரன்' 'தர்மப்பிரகாசம்,' 'உத்தரியத்தின் மகிமை' ஆகியன

**உங்களுக்கு கலைச் சேவைக்காகக் கிடைத்த கௌரவங்கள்?**

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி 'அண்ணாவி' பட்டம் வழங்கியது. திருமறைக்கலாமன்றத்தால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டேன். ஆயர் இல் [illegible] கள்' என்னும் பொருளில் கதை எழுதி, 3 ஆம் இடம் பெற்றேன். உத்தரியத்தின் மகிமை நாடக மேடையில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டும் உள்ளேன்.

**உங்களால் மறக்க முடியாத சம்பவங்கள் இருக்கிறதா?**

ஒரு தடவை நாரந்தனை தம்பாட்டிப் பகுதிக்கு குருநகரிலிருந்து சென்ற அண்ணாவி பக்கிரி சின்னத்துரையின் நாட்டுக் கூத்துக்கு, பக்கப்பாட்டுப் பாடச் சென்றிருந்தேன்.

அந்தக் கூத்தில் பாதிரியார் வேடத்தில் நடிக்க வேண்டிய நடிகர் வராததால், நட்டுவாங்கம் செய்த பக்கிரி சின்னத்துரை - திடீரென அநதப் பாத்திரத்தில் என்னை நடிக்கச் சொன்னார். அந்தக் காலத்தில் ஆங்கிலப் பாதிரிமார் புழக்கத்திலிருந்த நடைமுறையைப் பயன்படுத்தி, பாடம் இல்லாத அந்தப் பாத்திரத்தை அரைகுறை கொச்சைத் தமிழ் பேசி நடித்து, சமாளித்ததை இன்னும் மறக்க முடியவில்லை.

**இன்றைய இளைய தலைமுறைக் கலைஞர்களுக்கு கூறவிரும்புவது?**

இன்றைய இளைய தலைமுறைக் கலைஞர்கள் பெரும்பாலும் நாட்டுக்கூத்துக்களில் ஈடுபடுவது அரிதாகவே இருந்து வருகிறது.

அப்படி இருக்காமல், இளைய தலை முறையினரும் நாட்டுக் கூத்துக்களை பழகி நடித்து வந்தாலே, எதிர்காலத்தில் தமிழில் நாட்டுக் கூத்தென்ற அரியகலைப் பொக்கிசம் இருந்தது என்பதை அடுத்த பரம்பரைக்கும் கொண்டு செல்ல முடியும்.

அதேவேளை கவி, கொச்சகம், பரணி, இன்னிசை போன்ற நாட்டுக் கூத்துக்களுக்கே உரித்தான ராகங்களைச் சரியாகப் பழகி நடிக்கவும் ஆர்வம் கொள்ளவேண்டும்.

**முடிவாக உங்கள் பொதுவான கருத்தைக் கூறுங்கள்?**

நாட்டுக் கூத்துத்தான் என்றில்லாமல் - நாடகம், நடனம், இசை போன்ற இன்னோரன்ன பல கலைச் செல்வங்களும் இந்தக் காலகட்டத்தில், தேய்ந்து போகக் காரணம்- புதிதாக எங்கள் மத்தியில் தோன்றியுள்ள தொலைக்காட்சி ஊடகமே என்றால் மிகைப்படாது.

அவை காலத்தோடு அழிந்து போவன.

நின்று நிலைக்க முடியாதன. ஆகவே காலங்களுக்கு ஏற்றதான புதிய மெருகுடைய மாற்றங்களை, பழைய நாட்டுக் கூத்துக்களில் புகுத்தி, அதனைக் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு எமது இளைஞர்களுக்கு உண்டென்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்டிக் கொண்டு விடைபெறுகிறேன். ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்பான் பூமியதிர்வின் இடிபாடுகளில்
# சிக்கிய தாயும் பிள்ளைகளும் உதவிப் பணியாளர்களால் மீட்பு!



கடந்த சனிக்கிழமை ஜப்பானில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த தாய் மற்றும் அவரது இரண்டு பிள்ளைகள் ஆகியோரை நேற்றுமுன்தினம் மீட்புப் பணியாளர்கள் மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட மூவரும் விமானம் மூலமாக வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். ஆனாலும் தாயாரான ரக்காகோ மின்காவா (வயது39) உயிருடன் உள்ளாரா என்பதனை உறுதிப்படுத்த முடியவில்லையெனத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த மூவரும் கடந்த சனிக்கிழமை காரில் பயணம் செய்து கொண்டிருந்தவேளை பூமியதிர்வு ஏற்பட்டதால் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்தனரெனவும் நேற்றையதினமே இவர்களை மீட்புப்பணியாளர்கள் கண்டு மீட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த மூவரும் மீட்புப்பணியாளர்கள் அந்த இடத்திற்குச் செல்லும்வரை உயிருடனிருந்ததாகவும் பின்னர் தாயாரான மின்காவின் நாடித்துடிப்பு நின்று போய்விட்டதாகவும், மகன் தலையில் காயமடைந்து மயங்கிய நிலையில் காணப்பட்டதாகவும் ஜப்பானிய ஊடகமொன்று தெரிவித்தது.

அத்துடன் மீட்கப்பட்ட மூன்று வயது மகளான மாயுவின் நிலை தொடர்பாகவும் எதுவும் கூறமுடியாதுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற பூமியதிர்வினால் 31 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றையதினம் முன்னர் பூமியதிர்ச்சி இடம் பெற்ற பகுதியில் 6 றிக்ரர் அளவில் பூமியதிர்வு மீளவும் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பூமியதிர்வினால் எவருக்கும் காயம் ஏற்படாத போதிலும் பெரிய கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய பூமி அதிர்வினால், பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிகமாக குடியிருந்த குடியிருப்புக்களில் இருந்து இரண்டாம் பூமியதிர்வு ஏற்பட்டவேளை தூக்கி வீசப்பட்டனர்.

பூமியதிர்வு ஏற்பட்ட பகுதிகளை ஜப்பானியப் பிரதமர் யுனிசிரோ கொய்சுமி நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டதுடன் இந்தப் பகுதியில் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு தேசிய மற்றும் உள்ளூர் அரசாங்கங்கள் எவ்வாறு இணைந்து பொறுப்புடன் செயற்படவேண்டுமென்பதனை தான் உணர்வதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவும் மோசமான காலநிலை மற்றும் பனிப்பொழிவு காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்கமுடியாதுள்ளதுடன் இப்பகுதிகளில் உணவு மற்றும் தண்ணீருக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அதிகாரிகள் தெரிவிதத னர்.

# பிரிதிவி 3 ஏவுகணை இந்தியாவால் பரீட்சிப்பு!



அணுவாயுதங்களைத் தாங்கிச் செல்லும் பிருதிவி 3 ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரீட்சித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த ஏவுகணைப் பரிசோதனை ஒரிஸா மாநிலத்திலுள்ள சண்டிபூரில் நேற்று இடம்பெற்றது.

இந்த ஏவுகணையானது 300 கிலோ மீற்றர் அணுவாயுதங்களை காவிச் செல்லக்கூடியதெனவும், கப்பல் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்து ஏவப்படக் கூடியதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பஸ்ராவிலிருந்த பிரிட்டன் படைகள் ஈராக்கின் வடபகுதிக்கு செல்கின்றன



ஈராக்கின் தென்பகுதிநகரமான பஸ்ராவில் நிலைகொண்டிருந்த பிரிட்டன் படையினர் அங்கிருந்து வெளியேறி ஈராக்கின் வடபகுதிக்கு சென்றுகொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு செல்லும் படையினரில் 850 பேர் உள்ளதாகவும் இவர்கள் பிரிட்டனின் முதலாவது பட்டாலியனான பிளக்வோச் பிரிவைச் சேர்ந்தவர்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் இப்பகுதியில் பிரிட்டன் படையினரை நிறுத்த வேண்டுமென அமெரிக்கா பிரிட்டனுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னரே தற்போது இந்தப் படையினர் அப்பகுதிக்குச் செல்கின்றனர்.

ஈராக்கில் பல நடவடிக்கைகளை பிரிட்டன் படையினர் எதிர்கொண்டாலும் தற்போது செல்லும் பகுதி மிக ஆபத்தானதெனவும், ஆனாலும் அவற்றைத்தாம் எதிர்கொள்ள தயாராகவே இருப்பதாகவும் படையினர் தெரிவித்தனர்.

பிரிட்டன் படையினர் செல்லும் இடம் மிகவும் பிரச்சினைக்குரியதெனவும் இங்கு ஈராக்கிய தேசியவாதிகள் சதாம் ஹுசைனின் பாத் கட்சியினர் மற்றும் இஸ்லாமியவாதிகள் ஆகியோர் வசிப்பதாகவும் இவர்கள் இங்கு நிலைகொண்டிருந்த அமெரிக்கப்படையினருக்கு மிகப்பெரிய சவாலாக இருந்ததாகவும் பி.பி.ஸி செய்தியாளரான போல்வூட் தெரிவித்தார்.

இதேவேளை இப்பகுதியில் நிலைகொண்டுள்ள அமெரிக்கத் துருப்பினர் அங்கிருந்து வெளியேறி பலூஜாவிற்குச் சென்றுள்ளனர்.





## காஸா யூதக் குடியிருப்புக்களை அகற்ற
# யார் எதிர்ப்புத் தெரிவித்தாலும் ஷரோன் பின்வாங்கமாட்டாராம்!

காசா பிரதேசத்திலுள்ள யூதக் குடியிருப்புக்களை பின்னகர்த்துவது என்ற இஸ்ரேலிய பிரதமரின் திட்டத்திற்கு இஸ்ரேலிய அமைச்சரவையிலுள்ள சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றபோதும், அதற்குத் தான் பணிந்துபோகப்போவதில்லையென இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்தார்.

காஸா பிரதேசத்தில் இருந்து யூதக் குடியிருப்புக்களை பின்னகர்த்துவது தொடர்பாக இஸ்ரேலிய நாடாளுமன்றில் இடம்பெற்ற வாக்கெடுப்பு வெற்றியளித்துள்ள நிலையில் இஸ்ரேலிய அமைச்சரவை உறுப்பினர்கள் சிலர் ஏரியல் ஷரோனின் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்தத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்த இரு அமைச்சர்களை பிரதமர் ஏரியல் ஷரோன் பதவிநீக்கம் செய்தார்.

இதேசமயம், இஸ்ரேலிய குடியிருப்புக்களை காஸாப் பிரதேசத்திலிருந்து பின்வாங்கினால் அமைச்சரவையிலிருந்து நான்கு அமைச்சர்கள் விலகப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.




யூதக் குடியிருப்புக்களை காஸாப் பிரதேசத்தில் இருந்து பின்னகர்த்துவது என்கின்ற வாக்கெடுப்பில் இஸ்ரேலிய அமைச்சரவையின் 65 அமைச்சர்களுள் 45 பேர் ஆதரவாக வாக்களித்துள்ளனர். அமைச்சரவையின் 7 உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.


## யாழ்.மாவட்டத்தில்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
தமிழ் மாணவர் ஒன்றியம் ~ யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிமனைகளின் இணைந்த ஆதரவுடனும்,

## கிளிநொச்சி மாவட்டத்தில்

தமிழ் மாணவர் ஒன்றியம் ~ கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை ஆகியவற்றின் இணைந்த ஆதரவுடன்

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**க.பொ.த. (சா/ த) - 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை (பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்) யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் இலவசமாக நடாத்த உள்ளது.**

**மேலதிக விபரங்கள் வெகு விரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்**

*பாடசாலை பரீட்சார்த்திகளும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இக் கருத்தரங்கில் பங்குபற்றலாம்*

### யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை

IIS 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2831

45 வருடகாலசேவையில் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் 212, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளர் இலங்கை வங்கியின் 18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

SICS கணினி சேவைகள் இல.125A ,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எங்களின் நோக்கம், உங்களின் தொழில் நுட்பமுன்னேற்றம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம 302, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

UNIT 347, K.K.S. Road, Jaffna

Global Info IDM (PVT) LTD. IDM

சொலெக்ஸ் பல்மூக்கு கண்ணாடியகம 516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Softview Computer College 43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna

S.T.P 73, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

முன்னர் புதுக்குடியிருப்பிலும், மல்லாவியிலும் இயங்கி வந்த ரெக் கணினிப் பயிற்சி நிலையம் புதிய நவீன வசதிகளுடன் வட்டக்கச்சியில் இயங்குகிறது. இது தனது புதிய தொகுதி ஒன்றை,

01.11.2004 ஆரம்பிக்கவுள்ளது. திங்கள் காலை 9.00 மணிக்கு

வட்டக்கட்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில்

கற்கை நெறிகள்

MS - OFFICE
- MS - WINDOWS
- MS - WORD
- MS - EXCEL
- MS - POWER POIN
- MS - ACCESS

காலம்:- 04 மாதங்கள்
கட்டணம்:- 750 X 4

DESK TOP PUBLISHING
- PHOTO SHOP
- PAGE MAKER
- ILLUSTRATOR
- COREL DRAW

காலம்:- 06 மாதங்கள்
கட்டணம்:- 1000 X 4 ஒரு பாடத்துக்கு

விரிவுரைகள் அனைத்தும் தமிழில் நடாத்தப்படும் வேலைகள் செய்பவர்களுக்கு அவர்களின் வசதிக்கேற்ப வகுப்புக்கள் ஒழுங்குபடுத்தப்படும்.

தொடர்புகளுக்கு:- 1. கிராமிய அபிவிருத்திவங்கி, கிளிநொச்சி.
2. ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை, வட்டக்கச்சி.
(C/2874)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுவிஸ்பிரஜை கொலையுடன் புலிகளுக்கு தொடர்பில்லை

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மாமாங்கத்தில் சுவிஸ் பிரஜையான ஹான்ஸ் வுல்ரிச் ஹோர்சோக் கிரனைட் வீசிக் கொலைசெய்யப்பட்ட சம்பவத்துடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்புகள் இருப்பதாகத் தெரியவில்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் கொலை தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகக் கூறிய மட்டக்களப்பு மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளர் சுசானா ரிங்கார்ட் பெட்ரசன் - விடுதலைப் புலிகள் இச்சம்பவத்துடன் தொடர்பு பட்டிருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரங்கள் இல்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் கொலை தொடர்பாக பல்வேறு கோணங்களில் தாம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகத் தெரிவித்த பொலிஸ் அதிகாரியொருவர்- தேவைப்படும் பட்சத்தில் கொழும்பிலிருந்து விசேட குற்றப்புலனாய்வுத்துறையினர் வரவழைக்கப்படலாம் என்றும் தெரிவித்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் குடும்பத்தகராறு காரணமாக இடம் பெற்றிருக்கலாம் என்றும் பொலிஸ் தரப்பில் தற்போது சந்தேகம் நிலவுகிறது.

மனைவியின் முதல் தார மகன் மூலம் ஏற்கனவே அச்சுறுத்தல் விடுக்கப்படுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸில் இவரால் புகாரொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மனைவியின் வாக்கு மூலத்திலும் இவரது மரணம் தொடர்பாகத் தெளிவற்ற தன்மை இருப்பதாக பொலிஸ் தரப்பில் இருந்து தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

விடுதலைப் புலிகள் மீது இந்தச் சம்பவம் தொடர்பாக திட்டமிட்டு பழி சுமத்தியிருப்பது குறித்து பல்வேறு தரப்பிலிருந்தும் கண்டனங்களும், அதிருப்தியும் வெளியிடப்பட்டுள்ளது.

(01)

# மற்றுமொரு இளைஞரும் வாழைச்சேனையில் கைது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனைப் பிரதேசத்தில் மற்றுமொரு இளைஞரும் கைக்குண்டுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கிரானைச் சேர்ந்த முத்துலிங்கம் உதயகுமார் என்ற இளைஞர் கல்குடா - கும்புறுமூலை வீதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவம் பொலிஸ் இணைந்த கண்காணிப்புப் பிரிவினரால் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டார்.

இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் வந்த சமயம் - பொலிஸார் வழிமறித்தபோது ஒருவர் மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கி ஓடிவிட்டதாகவும் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர் மட்டும் கைதுசெய்யப்பட்டதாகவும், இந்தச் சம்பவம் தொடர்பாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது கல்குடா பொலிஸில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர், இன்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவார் என பொலிஸார் தெரிவித்தனர்.

## அமைச்சுக்கு மேலதிக செயலாளர்கள்

# ஜனாதிபதியின் திட்டத்தை நிராகரித்தார் பிரதமர்!

வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப்பெறும் இரண்டு அமைச்சுக்களின் செயலர்களுக்குப் புறம்பாக மேலதிக செயலாளர்கள் இருவரை நியமிக்கும் ஜனாதிபதியின் யோசனையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த ஆலோசனைக்குப் பதிலளித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களின் செயலாளர்கள் அமைச்சுக்களின் பரிந்துரைக்கு அமைவாகவே நியமிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் அமைச்சர்களின் கட்டுப்பாடுகளுக்கு உட்படாது அமைச்சர்களுக்குப் புறம்பாக கட்டுப்பாடுகளை விதிப்பது சாத்தியமற்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம் எதிர்வரும் நான்காம் திகதிக்குப் பின்னர் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்றும் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் பிரதமர் தெரிவித்தார்.

(01)

## ஆளும் கூட்டணியிலுள்ள

# பங்காளிக்கட்சிகளிடையே பிரச்சினையை தீர்க்க தூதுக்குழு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பங்காளிக்கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக உயர்மட்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் தேசிய இணைப்பாளருமான அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்கியமை - எண்ணைக்குள் தண்ணீர் கலந்ததை போன்ற செயலை நாம் செய்து விட்டோம்.

ஜே.வி.பி கட்சியின் கொள்கைகள், அவர்களின் அரசியல் தீர்மானங்கள் சுதந்திரக் கட்சியின் கொள்கையிலிருந்து வேறுபட்டது. இதனாலே அடிக்கடி அவர்களுடன் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்சிகளிடையே ஏற்பட்டு வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவினர் சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணை செய்து, கட்சித் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தி உரிய தீர்வினைக் காண்பர் எனத் தெரிவித்தார்.

### வலயக்...

கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, இன்றுமுதல் மினிபஸ்களின் ரயர்களின் தேய்வுநிலை, பயணிகள் ஏற்றும் அளவு, மற்றும் பொருட்களின் அளவுகளை அவதானிக்குமாறு பருத்தித்துறை நீதிவான் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(தீ-12,13,14)

### சமாதான...

தெரிவித்திருந்தார்.

தற்போது லக்ஷ்மன் கதிர்காமருக்கும் - ஜயந்த தனபாலவிற்கும் இடையான முரண்பாடு இறுக்கமடைந்துள்ள நிலையிலேயே ஜயந்த தனபால தனது பதவியை இராஜினாமாச் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜயந்த தனபால முன்னர் ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதக் களைவு பணியில் ஈடுபட்டிருந்த ராஜதந்திரி ஆவார். இவர் இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுக்கள் மூலமே தீர்வுகாண முடியும் என வலியுறுத்தி வந்தார்.

அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளராக ஜயந்த தனபால நியமிக்கப்பட்டமைக்கு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எதிர்ப்புத் தெரிவித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கப்பால் ஜே.வி.பியும் ஜயந்த தனபால தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் எனத் தெரிவித்திருந்தது.

ஆனால், ஜயந்த தனபால பதவி விலகப் போவதான செய்தியை அரச சமாதான செயலகம் மறுத்துள்ளது. ஏசியன் ரிபியோன் இணையத் தளத்தில் வெளியான ஜயந்த தனபாலவின் பதவி விலகல் தொடர்பான செய்தியை மறுத்துள்ள சமாதான செயலகத்தின் ஊடகப் பொறுப்பாளர் - ஜயந்த தனபால பதவி விலகுவதற்கான ஏற்பாடுகள் ஏதும் இல்லையெனத் தெரிவித்தார். (01)

### ஜே.வி.பியின்...

இதற்கமைய மாகாணசபை உறுப்பினர்களைக் கொண்டு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க ஜே.வி.பி தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தம்முடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு எதிராகச் செயற்பட்டால், நாட்டின் அனைத்து மாகாணசபைகளிலும் அங்கத்தவர்களாக இருக்கும் சுமார் 80 ஜே.வி.பியினர் மாகாணசபைகளில் ஆட்சியிலிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிப்பதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அரசாங்கத்தை தமது வழிக்குக் கொண்டுவரமுடியும் என ஜே.வி.பி அரசியற்குழு தெரிவித்துள்ளது. (01)

### புலிகள்...

இந்தச் சந்திப்பில் அண்மைக் காலங்களில் மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெற்ற தமது ஆதரவாளர்கள் மற்றும் சுவிஸ் பிரஜை உட்பட 6 ஆட்கொலைச் சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பு படைத்தரப்பின் கவனத்துக்குச் சுட்டிக்காட்டுவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

குறிப்பிட்ட சந்திப்பு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி நடைபெறும் என, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவிக்கின்றது. (01)

# பாதுகாப்பு நிதிஒதுக்கீட்டுக்கு எதிராக தமிழ்தேசிய கூட்டமைப்பு வாக்களிக்கும்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தால் எதிர்வரும் 10 ஆம் திகதி முதலாவது வரவு-செலவுத்திட்டத்தின் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டு விவாதத்திற்கு எதிராக வாக்களிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் - யுத்தநிறுத்தம் மற்றும் சமரதானம் நிலவும் காலப்பகுதியில் பாதுகாப்புக்கு பெருமளவு நிதி ஒதுக்கியிருப்பது தமிழ் மக்களிடையே அதிக சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏற்கனவே ஐக்கிய தேசிய முன்னணி அரசு 55 மில்லியன் ரூபா நிதியை பாதுகாப்புக்கு ஒதுக்கீடு செய்தபோது அதனை நாடாளுமன்றத்தில் கண்டித்திருந்தோம்.

ஆனால், எந்தக்காரணமும் இல்லாத போது இவ்வாறு அதிக தொகை ஒதுக்கீடு செய்வது நிலைமையை மேலும் சிக்கலாக்கலாம்.

இதேவேளை, இந்த அரசாங்கத்தின் முழுமையான வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பதா? வாக்களிப்பில் கலந்து கொள்ளாது விடுவதா? அல்லது ஆதரவளிப்பதா என்பது குறித்து எதிர்வரும் வாரத்தில் தாம் கூடி முடிவு எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மனநோயாளி...

கொலைசெய்த பெண் கொல்லப்பட்ட மூதாட்டி தனது தாய் எனவும் கடவுள் கேட்டுக்கொண்டதற்கு அமைய கத்தியால்வெட்டிப் புதைக்கும் முயற்சியில் ஈடுபட்டேன் என்றும் - மனநிலை பாதிக்கப்பட்டவர்போல வீட்டின் அறைகுள் இருந்தவாறு தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்த மக்கள் அங்கு குவிந்த அதேவேளை மானிப்பாய்ப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்து மாலை 5.30 மணியளவில் அங்கு வருகை தந்த பொலிஸார் கூடியிருந்த மக்களை அகற்றிய பின்னர் சம்பவம் தொர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

கொலையாளி எனச் சந்தேகிக்கப்படும் பத்திநாதர் கொலஸ்ரிகா (வயது 44) ஆகிய பெண்ணைப் பொலிஸார் கைதுசெய்ததுடன் சடலம் யாழ்போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(தீ-91,46)

கருத்தரங்கு III

அரசியலில் பெண்கள்

காலம் : 30.10.2004
நேரம் : 9.30 - 12.00

கருத்துரை வழங்குபவர்
திரு.பேராசிரியர் A.V.மணிவாசகர்
(அரசறிவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)



பெண்கள் அபிவிருத்தித் திட்டம்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106, 4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி-3285)

கண்ணிவெடி இடர் அபாயக்கல்வி கட்டுரை, சித்திரப்போட்டிகளின்

பரிசளிப்பு விழா

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்திய கண்ணிவெடி இடர் அபாயக்கல்வி கட்டுரை, சித்திரப்போட்டிகளின் பரிசளிப்புவிழா-

30.10.2004 சனிக்கிழமை காலை 10 மணிக்கு வெண்புறா நிறுவனத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

பரிசில் பெறுவோர் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்
63, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.222 5932 (சி/3285)

## மரண அறிவித்தல்

நாவாந்துறையை பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட **அந்தோனிமுத்து பிரான்சிஸ்** *(சம்மாட்டி புறஞ்சி)* 26.10.2004 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிசீலியா, றோஸ்மணி ஆகியோரின் அன்புக்கணவரும், அடைக்கலமரியை, ஸ்ரனிஸ்லோஸ், மரியா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், றொபேட், ஜோசை, மதியாபரணம், அமுதா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.10.2004 வியாழக்கிழமை (இன்று) புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும். இறுதித் திருப்பலியைத் தொடர்ந்து இவரது பூதவுடல் கொஞ்சஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொர்ள்கிறோம்.

*தகவல்*
S.ஸ்ரீபன் (பேரன்)
M.ராயூ (பேரன்)
J.கொன்சன் (பேரன்)

*விலாசம்*
101, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(971)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.